
# கொங்கு மாமேதை
# அருட் செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம்



பொள்ளாச்சிக்கு அருகமைந்த சோமன்துறை சித்தூரில், உறையூர்ச் சோழன் காலத்தில் சீதனமாகக் கொங்கு நாட்டிற்கு வந்து, காங்கேயம் பகுதியில் முளைவிட்டுப் பின் நாடெங்கும் கிளை பரப்பிக் கொண்ட குலவழியான செங்கண்ணக் கூட்டத்தில் பிறந்து, தோட்டமும், புஞ்சையும் கலந்த பதினாறு ஏக்கர் பூமியில் விவசாயம் செய்து வாஞ்சையுடன் சொந்த பந்தம் பேணி, ஊர்ப் பெரியதனக்காரராகவும், மாரியம்மன் கோயில் அறங்காவலராகவும் விளங்கிச் சிறப்புற்று வாழ்ந்த பழனிக்கவுண்டரின் புதல்வர்தான், பொள்ளாச்சியின் தந்தை எனும் பெருஞ்சிறப்புப் பெற்றவரும், நமது உள்ளங்களிலெல்லாம் அன்பால் நிறைந்திருக்கிற அருட்செல்வர் அவர்கள் தகப்பனாரான நாச்சிமுத்துக் கவுண்டர் ஆவார்.!

வெகுகாலம் பிள்ளைப்பேறு கிட்டாமையால் குலதெய்வமான நாட்டராயன் கோயில் வழிபாடு செய்து, வருத்தித் தவமிருந்து பெற்றெடுக்கப்பட்ட பிள்ளையாதலின், இளம் வயதிலேயே, யாராலும் அடக்க இயலாத முரட்டுக் குதிரையைக் கூட அடக்கியது போன்ற வீரதீரச் செயல்களில் ஆற்றல் மிகுந்திருந்த நாச்சிமுத்துக் கவுண்டரின் உள்ளத்தில் கனன்று வந்த தேசபக்தி நாளடைவில் கதரே அணியும் காந்தி பக்தியாக வளர்ந்து, கள்ளுக்கடை மறியல் செய்த தொண்டர்களை ஊக்குவிக்கும் தொண்டாக ஓங்கி நின்றது. 1931–ம் ஆண்டு, இருபத்தைந்து பங்குதாரர்களுடன் பத்தொன்பதாயிரம் ரூபாய் மூலதனத்தில், நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்களை நிர்வாக இயக்குநராகக் கொண்டு துவக்கப் பெற்ற ஆனைமலை பஸ் டிரான்ஸ்போர்ட் (ABT), இன்று ஆல்போல் வளர்ந்து, அருகு போல் வேரூன்றி, ஏபிடி லிமிடெட், எபிடி பஸ் ஸர்வீஸ், எபிடி பார்சல் வர்வீஸ், எபிடி பம்ப், எபிடி மாருதி, ஏபிடி வின்ட் எனர்ஜி, ஏபிடி எக்ஸ்பிரஸ், எபிடி எக்ஸ் டிராவல்ஸ், எபிடி இன்ஃபோ சிஸ்டம்ஸ், எபிடி டூ வீலர் என்று பல அமைப்புகளாக விரிந்து தழைத்திருக்கிறது.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்

என்னும் வள்ளுவர் குறள் நெறிக்கேற்ப சிறுவயது முதலே, தந்தையின் புகழ்நிழலில் ஒடுங்கிக் கொள்ளாமல் தானும் ஒரு புகழ்த் தருவாக ஓங்கி வளர வேண்டும் என்ற உறுதியோடு தனது லட்சிய வாழ்க்கையைத் தொடங்கிய அருட்செல்வர் அவர்கள், காந்தியடிகளின் அன்னியத் துணி எரிப்பு இயக்க முழக்கம் பொள்ளாச்சியில் தீவிரமடைந்த பொழுது, தான் போட்டிருந்த சில்க் சட்டையைக் கழற்றி மூண்டெரியும் நெருப்பில் எரிந்துவிட்டுக் கதராடை உடுத்தத் தொடங்கியதும், ஒருமுறை உடல்நலம் இல்லாமல் இருந்தபோது மருத்துவர் கொடுத்த ஒரு டானிக்கில் ஆல்கஹால் சிறிது இருப்பதாக மருந்து பாட்டிலின் மேல் ஒட்டியிருந்த லேபிளில் இருக்கக் கண்டு அந்த டானிக் மருந்தை சாப்பிட அறவே மறுத்ததும், தனது இளமைப் பருவத்தில் தன்னைப் பக்குவமாக உருவாக்கிய ஆசிரியர் திரு. கே.பி. மாதவன் பிள்ளையை நினைக்கும் போது இன்று நிறைய நூல்களைப் படிப்பதற்கும், வெளியிட விழைவதற்கும் ஆசிரியர் கொடுத்த இளமைத் தூண்டுதலே காரணம் என்று பெருமை கொள்வதும், பள்ளிக்குச் சென்ற காலத்தில் தினமும் தாத்தா கொடுக்கும் இரண்டணாவில் ஓரணாவுக்கு தின்பண்டம் வாங்கி சாப்பிட்டு விட்டு மீதி ஓரணாவைப் புத்தகம் வாங்கச் சேமித்து வைத்த இனிய அநுபவமும், அவரது அடிப்படைப் பண்புகள் எத்தன்மைத்தாயின என்பதை எல்லோர்க்கும் எடுத்துக் காட்டும்!

அன்றைய, அலெக்சாண்டர் டூமாஸின் ‘கவுண்ட் ஆப் மாண்டி கிரிஸ்டோ’ விலிருந்து இன்றைய தாமஸ் பிரைட்மேன் எழுதிய The world is Flat என்ற புத்தகம் வரை, அருட்செல்வர் விரும்பிப் படித்த புத்தகங்கள் ஏராளம். அதே போன்று தமிழிலும், அவர் படிக்காத நூல்களே இல்லை எனும் அளவுக்கு பக்தி இலக்கியங்கள், வரலாற்று ஆய்வுகள், காவியங்கள், நவீன நாவல்கள், அறிவியல் நூல்கள், திருக்குறள், திருவருட்பா, திருவாசகம் போன்ற அறநெறி ஆன்மீகத் திரட்டுக்கள், இப்படி ஆயிரக்கணக்கான நூல்களைப் படித்திருப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை அவ்வப்போது நினைவு கூர்ந்து எடுத்தியம்பும் ஆற்றல் மிக்கவராகவும் விளங்குகிறார். தான் பட்டம் பெற்ற பௌதீகத் துறையில் மட்டுமல்லாமல் ஆங்கில இலக்கியம், அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றிலும் ஆழ்ந்த அறிவு அருட்செல்வருக்கு உண்டு.

இராமலிங்க வள்ளலார் அருளிய சன்மார்க்க ஊற்றுக்கள் அவர் சித்தி அடைந்த பின்னர் அன்பர்களிடையே நிலவிய அருட்பா மருட்பா சர்ச்கைகளினால் தூர்ந்து போய்க் கொண்டிருந்த காலகட்டத்தில், பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இராமானந்த

சுவாமிகள் சன்மார்க்கத்தை அறிமுகப்படுத்தினார்கள் எனினும், கொலை மற்றும் புலாலைத் தவிர்க்கும் ஒரு புதிய கொள்கை மரபு கொங்கு நாட்டில் இங்கொன்றும் அங்கொன்றுமாக மட்டுமே தளிர் விட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அருட்செல்வர் அவர்களது தந்தையார் நாச்சிமுத்துக் கவுண்டர் அவர்கள் தனது இல்லமாகிய சக்தி நிலையத்தை, மார்க்கங்கள் மாறுபட்டாலும், மாச்சரியங்களுக்கு இடங்கொடாது மனங்கள் சந்திக்கும் ஒரு சன்மார்க்க ஆசிரமம் போல ஆக்கியதன் விளைவு, இன்று அகில உலகமெங்கும் அருட்பிரகாச வள்ளற்பெருமானின் அருட்பா கருத்துகளும், ஜீவகாருண்ய ஒழுக்க நெறி உணர்வும், அருட்செல்வர் அவர்களது அருட் கொடையாலும் அற உணர்வாலும் விரைந்து நிறைந்து வரும் விந்தையைக் காண முடிகிறது.

1952 முதல் 1967 வரை மூன்று முறை தமிழகச் சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த அருட்செல்வர் அவர்கள் கிராம நலம், பாசன வசதி, புதிய நதிநீர்த் திட்டம், கல்விக் கொள்கை, தொழில் வளர்ச்சி ஆகிய துறைகளில் போதுமான கருத்துச் செறிவோடும், தக்க ஆதாரத்தோடும் சட்டமன்றத்தில் விவாதிப்பது உண்டு. சாலைச் சீராக்கம், மருத்துவ வசதி, தோட்டத் தொழிலாளர் நலக்காப்பு, பரம்பிக்குளம் ஆழியாறு அணைத்திட்டம், அமராவதி அணைத்திட்டம், கோவை நகர் விரிவாக்கத் திட்டம் ஆகியவை முழுமையாய் அருட்செல்வர் அவர்களது முயற்சியால் விளைந்தவையாகும். ஒரு நாளைக்கு ஐந்தாறு கிராமங்கள் என்று வகுத்துக் கொண்டு, மாதத்தில் பத்து நாட்கள் கால் நடையாகவே நடந்து சென்று மக்கள் நலத் திட்டங்களை அவர் நிறைவேற்றிய பாங்கு, எண்ணி மகிழ்ந்து போற்றிப் பெருமைப்படுத்தற்குரியதாகும்

தொழிலறிவும், கல்வியறிவும் இணைந்து வளர்ந்தால்தான் சமுதாயத்திற்கு முழுப்பயனை நல்கிட முடியும் என்னும் உறுதியான எண்ணம் அருட்செல்வருக்கு இருப்பதன் காரணமாக, பொள்ளாச்சி பழனிக் கவுண்டர் உயர்நிலைப் பள்ளியில் பயிலும் உயர்வகுப்பு மாணவர்கள் வாரத்தில் மூன்று நாட்கள் பள்ளியில் கல்வி கற்பது, மற்ற மூன்று நாட்கள் ஏதேனும் ஒரு தொழிலகத்தில் தொழிற் பயிற்சி பெறுவது என்னும் சிறப்பான கல்வி முறை மிகமிகச் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த முறை, தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் கடைப்பிடிக்கப் பட்டால், கல்வி கற்கின்ற காலத்திலேயே இளைஞர்கட்குப் பொறுப்புணர்ச்சி வளரும் என்பதும், தமிழகம் எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு பெற்ற மாநிலமாக விளங்குமளவுக்கு எதிர்காலத்தில் இளைஞர்களின் அறிவும் உழைப்பும் விளங்கும் என்பதும் அருட்செல்வரின் அசைக்க முடியாத நம்பிக்கைகள்.

'அன்பலால் பெருளும் இல்லை, தொண்டலால் உயிர்க்கு ஊதியமும் இல்லை' என்று வாழும் அருட்செல்வர், ஈரோடு, பவானி, கோபி ஆகிய பகுதி விவசாய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வண்ணம் சக்தி சர்க்கரை ஆலையை அமைத்து, அப்பகுதியில் வாழும் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் ஒளியேற்றியது அவரது புகழுக்குப் புகழ் சேர்த்த ஒன்று!.

'நம்முடைய மகாலிங்கம் அவர்கள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் எழிலுற அனைவரும் பாராட்டத்தக்க வகையில் செய்யக் கூடியவர். இன்றைக்கு வாடிய பயிர்களாக இருக்கின்ற ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கான தொழில் திட்டங்களை முடிந்தவரை நிறைவேற்ற வேண்டும் என்பதில் நாட்டம் கொண்டவர்' என்று **11–08–1989** அன்று அருட்செல்வரைப் பாராட்டிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், மேலும் அருட்செல்வரைப் போற்றி,

"பண்பும் பணமும் உடைத்தாயின் தொழிலாக்கம்
எங்கும் பரவும் என்ப"

என்னும் புதுக்குறளையும் அரங்கேற்றினார் என்பது, எண்ணிட எண்ணிடப் பெருமையால் பூரிக்கச் செய்யுமன்றோ!

ஐயாவிற்கென்று சில கொள்கைகள் உண்டு. அந்தக் கொள்கைகளை யாராலும் அசைக்க முடியாது. நட்புக்காக லட்சியத்தை விட்டுக் கொடுப்பவரல்லர் அவர்.கல்வி,தொழில், அரசியல் இவற்றைப் பற்றி எப்போதும் சிந்தித்துப் புதிய கருத்துகளைத் துணிவோடு எடுத்துச் சொல்லும் ஆற்றல் மிக்கவர். ஒரு குறுகிய அரசியல் வட்டத்திற்குள் இவர் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்வதில்லை' என்று **25.5.1973–ல்** தினமணிகதிர் அருட்செல்வர் அவர்களைப் பாராட்டி எழுதியதற்கேற்பவே தனது எண்ணங்களையும், செயல்களையும் வகுத்துக் கொண்டிருந்ததினால், பெருந்தலைவர் காமராசர் அவர்களோடு பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு கொள்கைகளில், செய்ல்பாடுகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்த போதும், காமராசர் மறைந்தபோது, அவரிடம் கொண்டிருந்த நட்பைப் பேணி அவருக்குக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியது கண்டோர் கண்களுக்கெல்லாம் குணக் குன்றமாக, கோபுர தரிசனமாகத் தோன்றியது.!

"சோசலிசம் என்று நாம் பேசும் போது ஒருவன் ஏழ்மை காரணமாகச் சமுதாயத்தில் கஷ்டப்படக் கூடாது என்பதுதான் அதன் அடிப்படை நோக்கம். ஆனால் இன்றும் பழைய காலச் சமுதாயமாக, பழைய முறையிலேயே நாம் திட்டங்களையும், அரசாங்கச் சலுகைகளையும் கொடுத்துக் கொண்டே வருகிறோம். இது சமுதாயத்தில்

பெரிய மாச்சரியங்களை, குரோதங்களை, சங்கடங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. அரசாங்கம் கொடுக்கும் சலுகைகள், ஜாதி அடிப்படையில் இல்லாமல் ஏழ்மையின் அடிப்படையில் இருக்க வேண்டும். சுதந்திரம் பெற்று 27 ஆண்டுகட்குப் பிறகு ஜாதி அடிப்படையில் சலுகைகள் எனும் நிலையில் போய்க் கொண்டிருந்தால் நாம் எந்த லட்சியத்திற்குப் பாடுபட்டோமோ, எப்படி நாம் சோசலிச சமுதாயம் அமைய வேண்டுமென விரும்புகின்றோமோ, அத்திசையில் போகாமல் மாறுபட்ட திசையில் போய்க் கொண்டு இருக்கிறோம் என்றுதான் தோன்றிகிறது" என்று அருட்செல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரையில் எவ்வளவு தீர்க்க தரிசனம் இருக்கிறது என்பதைத் தொலைநோக்குப் பார்வையுடன் சமுதாயச் சிந்தனை மேற்கொள்ளும் யாவரும் தெளிவாக உணர்வர்.

ஞாபக சக்தி என்பது வேறு; சிந்தனை சக்தி என்பது வேறு. சிந்தனை சக்தியைச் செழிக்கச் செய்வது தான் சிறந்த கல்வி என்றும்,

"விரல்களுக்குள் திறமைகளை விதைத்து விட்டால் அனுதினமும் அறுவடை செய்யலாம். நமது தொழிலாளர்களுக்கு வேண்டிய புதிய புதிய கருவிகளைக் கண்டுபிடித்துத் தரும் வகையில் நமது பொறியியல் கல்லூரி ஆய்வரங்குகள் முன் நிற்க வேண்டும்" என்றும்,

"அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் மாணவர்கள் திறமையை வளர்ப்பதற்குப் பாடப் புத்தக எல்லைக் கோடுகளைத் தாண்டிச் செல்ல வேண்டும். பத்திரிகைகள் படிக்க வேண்டும். முன்னேற்ற உயர்வு என்பது, இப்படித் தொடர்ந்து படித்து வருபவர்களை நாடித் தேடிவரும். நூல்நிலையம் என்பது சென்ற காலத்து ஞானங்களையும், தற்காலத்து அறிவையும், எதிர்காலத்திற்குரிய சிந்தனையையும் கிடைக்கச் செய்யும் இடம்....." என்றும் அருட்செல்வர் வழங்கிய சிந்தனைத் துளிகளை கல்வியாளரும், அரசாங்கமும் சற்று எண்ணி ஆய்ந்து பார்ப்பார்களேயானால் கல்வித் துறையில் பற்பல அற்புதமான, ஆக்கபூர்வமான மாற்றங்களை உருவாக்க முடியும்.

தமிழ்வழிப் போதனை முறையைக் கல்லூரிகளில் அறிமுகப்படுத்த அரசு முற்பட்டபோது, அதனை நடைமுறைப்படுத்திய முதற் கல்லூரியாகப் பொள்ளாச்சி N.G.M.கலைக் கல்லூரியை பெருமை பெறச் செய்தவர் அருட் செல்வர். தொழில்துறைக் கல்லூரிகளிலும் தமிழே பயிற்சி மொழியாக வேண்டும் என்பது அவரது கல்விக் கொள்கை.

“நமது இன்றைய அவசரப் பணி கலைச் சொற்களை மொழி பெயர்ப்பதல்ல. அதற்குப் பதிலாக பொறியியல், மருத்துவம், வேளாண்மை, பொருளாதாரம், வாணிபம், அரசியல் முதலிய துறைகளையே தமிழில் தரவேண்டும்” என்பது அருட்செல்வரின் தமிழ் வளர்ச்சித் திட்டம்.

“தமிழ் எழுத்துக்களை ரோமன் எழுத்துக்களில் மாற்றி அந்த எழுத்துக்களில் நம் இலக்கியங்களையும், மற்ற கலைகளையும் அச்சிட்டு வழங்கும் நிலை வந்தால்தான் உலகத் தமிழர்கள் அனைவரும் தமிழைப் படிக்க முடியும்; விஞ்ஞானத் துறையில் வளர முடியும்; உலகில் உள்ள தமிழ் மக்களையெல்லாம் ஒரே அணியில் ஒன்று படுத்தவும் முடியும்....” என்பது அருட் செல்வர் அவர்கள் தந்த உலகத் தமிழ் வளர் திட்டம்.

அன்பு வள்ளலாய்,

பண்பின் செல்வராய்,

அறநெறி வாழ்பவராய்,

இன்முகச் செம்மலாய்,

ஈகைப் பெருங்கடலாய்,

உண்மையே வாழ்வெனக் கொண்டவராய்,

ஊக்கத்தை எல்லோர்க்கும் ஊட்டுபவராய்,

எல்லையிலா அறிவாற்றல் மிக்கவராய்,

ஏற்றமிகு எண்ணமே எப்போதும் கொண்டவராய்,

ஒப்புரவிற்கு ஒல்காத கடனறி காட்சியராய்,

ஓயாது பிறர் நலம் சிந்திக்கும் உத்தமராய்,

ஐந்தொழுக்கப் பண்பாட்டின் அத்தாட்சியாய் விளங்கும் ஏழைபங்காளர், அறிவியல் வித்தகர், ஆன்மீகப் போராளி, கல்வித் தந்தை, தொழில் ஞானி, சமுதாயச் சிற்பி, பல்கலைச் செம்மல், டாக்டர் அருட்செல்வர் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், ‘கொங்கு மாமேதை’ எனும் பட்டத்தை வழங்கி வணங்கிப் பெருமை அடைகிறது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் கௌரவித்த

# கொங்கு மாமணிகள்

2001 – ஆம் ஆண்டு

1. திரு. **கே. எம். சென்னியப்பன்**

2. டாக்டர் **பழனி ஜி. பெரியசாமி**

3. திரு. ஜெம். **R. வீரமணி**

2002 – ஆம் ஆண்டு

4. திரு. **S.V. பாலசுப்பிரமணியம்**

5. திரு. **R. காந்தி**

2003 – ஆம் ஆண்டு

6. திரு. **D.R. கார்த்திகேயன்,** I.P.S. (Retd.)

7. திருச்சி. **R. தேவராஜன்**

8. திரு. **G.R. சுந்தர வடிவேல்**

2004 – ஆம் ஆண்டு

9. முனைவர் சிலம்பொலி **சு.செல்லப்பனார்**

10. டாக்டர் **சி. பழனிவேல்**

11. டாக்டர் **B.K. கிருஷ்ணராஜ் வாணவராயர்**


2005 – ஆம் ஆண்டு

12. திரு. NSIT. M. **முருகேசன்**

13. திரு. **K. பழனியப்பன்**

14. திரு. **C.K. இராமசாமி**

# கொங்கு மாமணி



## நல்ல கோவிந்தசாமி

திரு நல்ல கோவிந்தசாமி அவர்கள், ஈரோடு மாவட்டம், பள்ளபாளையம் என்ற சிற்றூரில் தெய்வத்திரு. நல்லசாமி – தங்கம்மாள் ஆகியோரின் புதல்வராக 19.08.1940–ல் பிறந்தார். இவர் கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர். தனது தாய் மாமன் கூரை கூட்டத்துச் செம்மல் திரு. நல்லசாமி அவர்களின் பெருங்கருணையால் சித்தோடு அரசு உயர்நிலைப் பள்ளியிலும், கோவை அரசு கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரமும் பயின்றார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கு இணங்க பள்ளி, கல்லூரிப் படிப்பின் போதே படிப்பிலும், விளையாட்டிலும் முதல் மாணவராக விளங்கினார். இவரது பெரியப்பா தெய்வத்திரு. ராவுத்த கவுண்டர், காவல் துறையில் பணியாற்றிய காரணத்தால் அத்துறையில் நாட்டம் கொண்டு 1962–ல் காவல் உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்னர் காஞ்சிபுரம் நகரத்தில் உதவி ஆய்வாளராகப் பணியமர்த்தப்பட்டார். அவரின் கடமைப்பற்றாலும், கடும் உழைப்பாலும் அதிகாரிகளாலும், பொதுமக்களாலும் பெரிதும் பாரட்டப் பெற்றார். 1965–ம் ஆண்டில் மதுவிலக்குச் சட்டத்தை அமுல்படுத்திய அவரது செயல்பாட்டிற்கு அப்போதைய தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு. அருள் அவர்களின் பாராட்டும் பெற்றார். அதன் பிறகு சென்னைக்கு மாற்றலாகி ஏழுகிணறு, திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை போன்ற பெரிய காவல்நிலையங்களில் சிறப்பாகப் பணியாற்றி அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெற்றார். 1967–ல் சிம்சன் கம்பெனியின் வரலாறு காணாத தொழிலாளர் வேலைநிறுத்தப் பிரச்சனையைச் சாதுர்யமாகக் கையாண்டு நிலைமையைச் சமாளித்தார். அதற்காக அப்போதைய அமைச்சர் மாண்புமிகு க. ராசாராம் அவர்களால் உயர்வாகப் பாராட்டப்பெற்றார்.

1965–ம் ஆண்டு சென்னைக்கு வந்தது முதல் தான் பிறந்த கொங்கு இனத்தின் மீது பற்றுகொண்டு நமது இனத்தின் சிறப்பினை உலகறியச் செய்யும் ஆர்வத்துடன் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கப்பணிகளில் ஈடுபட்டு தொடர்ந்து பணியாற்றி

வருகிறார். **1972–**ம் ஆண்டு காவல் ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்று ஐஸ்ஹவுஸ், அண்ணாசாலை மற்றும் திருவல்லிக்கேணி காவல் நிலையங்களில் பணியாற்றியுள்ளார். **1974–**ம் ஆண்டு இலங்கை தூதரகத்திலும், மகபோதிசங்கத்திலும் வெடிகுண்டுத் தாக்குதல் நடைபெற்று தமிழகத்தில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவானபோது மூன்றே நாட்களில் குற்றவாளிகளைக் கைது செய்து அப்போதைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் நேரடிப் பாரட்டைப் பெற்றார்.

இவரது காலங்களில் நடைபெற்ற சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தலின் போது சாதுர்யமாகப் பணியாற்றி சட்டம் ஒழுங்கை நன்கு பராமரித்தார். **1978–**ஆம் ஆண்டு நடைபெற்ற துறைமுக கப்பல் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை, சிறப்பாகப் பணிபுரிந்து அமைதியான முறையில் தவிர்த்தார்.

இவரது கடமைப்பற்று, நற்பணி மற்றும் மதிப்புமிக்க சேவை ஆகியவற்றுக்காக **1981–**ஆம் ஆண்டில் முதலமைச்சர் விருதும், **1984–**ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

**1985–**ம் ஆண்டு பதவி உயர்வுபெற்று காரைக்குடி, குடியாத்தம், முசிறி போன்ற பகுதிகளில் உதவி கண்காணிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். கரூரில் கொங்கு இனமக்களுக்கும், மற்ற இனமக்களுக்கும் ஏற்பட்ட மிகப்பெரிய மோதலை மிகத் திறமையாகக் கையாண்டு அனைத்து மக்களின் பாராட்டையும் பெற்றார். அப்போது நமது இனத்தின் தலைவர் கோவை செழியன் அவர்கள் கரூருக்கு நேரில் வந்து இவரைப் பாராட்டினார்கள்.

சென்னையில் பூக்கடை, புளியந்தோப்பு, சைதாப்பேட்டை, அடையாறு, தி.நகர் காவல் நிலையங்களில் உதவி ஆணையராக சிறப்பாகப் பணியாற்றினார். இவரது சிறந்த பணியைக் கருத்தில் கொண்டு **1996–**ஆம் ஆண்டு சென்னை உயர்நீதி மன்றத்தில் ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவின் தலைமை அதிகாரியாக தலைமை நீதிபதி அவர்களால் நியமிக்கப்பட்டுச் சிறப்பாக பணிபுரிந்துள்ளார். **1977–**ஆம் ஆண்டு மாவட்டக் கண்காணிப்பாளராக பதவி உயர்வு பெற்று அறநிலையத்துறையில் ஊழல் தடுப்புப் பிரிவு கண்காணிப்பாளராகவும், அதன் பிறகு நாமக்கல் மாவட்டக் கண்காணிப்பாளராகவும் பணியாற்றி **31.08.98** அன்று ஓய்வு பெற்றார்கள். காவல் துறையில் **36–**ஆண்டுகள் சிறந்த முறையில் பணியாற்றி நமது இனத்திற்கு நன்மதிப்பைப் பெற்றுத்தந்துள்ளார்.

காவல் துறையில் ஓய்வு பெற்றபின் சமுதாயப்பணியில் தன்னை அர்ப்பணித்து இன்றுவரை ஆர்வமாகப் பணியாற்றி வருகிறார். கடந்த 40 ஆண்டுகளாக சென்னையில் இருந்து கொண்டு தமிழகத்தின் எப்பகுதியில் இருந்து உதவி கேட்டு வந்தாலும் தன்னால் முடிந்த உதவியைச் செய்துவருகிறார். கொங்கு நண்பர்கள் சங்கத் துணைத் தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் சொல்வது போல், சென்னையில் கொங்கு இனத்தின் முகவரி அண்ணன் கோவிந்தசாமி என்று சொன்னால் அது மிகையாகாது. 2000–ஆம் ஆண்டு கொங்கு நண்பர்கள் சங்கத்தின் தலைவராக இருந்து, இளைஞர்களைத் தட்டி எழுப்பி சமுதாயப் பணியாற்ற வைத்தார் என்ற பெருமையும் இவருக்குண்டு.

நமது இனக் குழந்தைகளின் கல்விச் சேவைக்காக சித்தோடு மற்றும் கவுந்தப்பாடியில் சரசுவதி வித்யாநிகேதன் மெட்ரிக் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் சரசுவதி வித்யாசரம் மெட்ரிக் பள்ளி, மேல்நிலைப்பள்ளி இவற்றைத் தனது நண்பர்களுடன் சேர்ந்து மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறார்.

இவர் தனது தாய்மாமன் மகள் சரசுவதியை 1965–ம் ஆண்டு மணம் புரிந்தார். வாரிசகளாக கலையரசி என்ற மகளும், செந்தில்குமார், ராவுத்தன் தேவ் ஆனந்த் என்ற இரு மகன்களும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் முடிந்து, எல்லோரும் அமெரிக்க நாட்டில் பணிபுரிந்து வருகிறார்கள். வான் புகழ் வள்ளுவரின் குறளுக்கேற்ப,

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள

என்ற குலப்பெருமையை வாழ்வில் கடைபிடித்து எங்கு வாழ்ந்தாலும், பிறந்த மண்ணும், சார்ந்த இனமும், வாழ்கின்ற நாடும் வளர்ந்து வான் புகழ்தேட, தாய் வளர்த்த பண்பு மறவாது, வளரும் அன்பு குறையாமல் சமுதாயப் பணியாற்ற வேண்டும் என்பதே இவரது வாழ்வின் குறிக்கோள்.

இவருக்கு ‘கொங்கு மாமணி’ விருது வழங்குவதில் சென்னைகொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# கொங்கு மாமணி



## சக்தி மசாலா P.C. துரைசாமி

சர்வதேசத் தரச் சான்றிதழ்களான ISO 9001:2000 மற்றும் HACCP பெற்றுள்ள சக்தி மசாலா நிறுவனம் சர்வதேசத் தரமான மசாலாப் பொடிகள், ஊறுகாய் வகைகள் மற்றும் அப்பளம், மாவு வகைகளை இந்தியாவிலுள்ள இல்லங்களில் சுவையூட்டச் செய்வதில் பெருமகிழ்ச்சியடைகிறார்கள்.

இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலுமுள்ள ஒவ்வொரு இல்லத்தரசியும் தங்கள் சமையல் அறையைச் சங்கீத மேடையாக்கி வருவது சக்தி மசாலா நிறுவனத்தின் 50க்கும் மேற்பட்ட வகை வகையான சக்தி மசாலாப்பொடிகளே. இந்தச் சங்கீத மேடைக்கு மேலும் சுருதி கூட்டுவது பெண்களின் கை மணம். கூடவே கொஞ்சம் சக்தி மசாலாப் பொடிகள்.

இந்தச் சாதனைக்கும் சிறப்புக்கும் சொந்தக்காரர் நிறுவனர் திரு. பி.சி.துரைசாமி அவர்களும், அவர்கள் துணைவியார் திருமதி சாந்தி துரைசாமி அவர்களும் ஆவார்கள். திரு. துரைசாமி அவர்கள் 1951 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டத்தில் பிறந்தவர். சக்தி தேவி என்ற மகளும், செந்தில்குமார் என்ற மகனும் அவர்களின் வாரிசுகள்.

30 ஆண்டுகளுக்கு முன் சிறு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட சக்தி மசாலா இன்று உலகெங்கிலும் தன் சுவையும், மணமும் பரப்பி வருவது ஒரு இமாலய வளர்ச்சியென்றால், இந்த வளர்ச்சிக்குப் பின்னே உள்ளவை கடுமையான உழைப்பு, விடா முயற்சி, சாதிக்க வேண்டும் என்ற வேகம். நிறுவனர் திரு.பி.சி.துரைசாமி அவர்கள் மசாலாப் பொடிகளை ஆரம்பித்த காலத்தில் அவற்றிற்கு இல்லத்தரசிகளிடம் வரவேற்பு இல்லாத கால கட்டம். மசாலாப் பொருட்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வாங்கி, சுத்தம் செய்து, காய வைத்து, வறுத்து அரைத்து உபயோகப்படுத்துவதையே அவர்கள் விரும்பினர். அந்த அளவிற்கு அவர்களுக்கு நேரமும் இருந்தது. ஆனால் மாறிவருகின்ற காலத்தில், பெண்களும் வேலைக்குச் செல்லும் காலத்தில் அவர்களுக்கு சமையலை

எளிமையாக்கும் வழிமுறைகள் தேவைப்பட்டன. அவர்களின் இந்தத் தேவைக்கு சரியான வரப்பிரசாதமாக வந்தது சக்தி மசாலா. ஒரு முறை வாங்கியவர்கள் மீண்டும் வாங்கி உபயோகிக்கும் அளவிற்கு தரமும், சரியான விலையும் இருந்ததால் சக்தி மசாலா பொடிகளுக்கு இருந்த வரவேற்பு பெருகிக் கொண்டே சென்றது.

தாய்மார்களின் இந்த வரவேற்பே பெரிய உற்சாகமளிக்க, திரு. பி.சி. துரைசாமி அவர்களும், அவருடன் இணைந்து செயல்பட்டு வரும் அவரின் இல்லத் துணைவி திருமதி சாந்தி துரைசாமி அவர்களும் இரவு பகல் பாராது புதிய புதிய வகைகளை அறிமுகப்படுத்தி பெரு வெற்றியினை அடைந்துள்ளனர்.

‘பாரம்பரிய உணவுகள் புதிய தொழில் நுட்பத்துடன்’ என்பதைத் தாரக மந்திரமாக எடுத்துக் கொண்டு. புதிய புதிய தொழில் நுட்பங்களை மசாலாப் பொடிகள் தயாரிப்பதில் அறிமுகப்படுத்தினர்.

சக்தி மசாலாவின் சிகரத்தை நோக்கிய பயணத்திற்கு உறுதுணையாய் இருப்பவர்கள் 800க்கும் மேற்பட்ட தன்னலம் கருதாத, கருமமே கண்ணாய் இருக்கும் ஊழியர்கள். திரு.பி.சி.துரைசாமி அவர்களின் கனவுகளை நனவுகளாக்கி வரும் இவர்களே சக்தி மசாலாவினை மற்ற மசாலாத் தயாரிப்புகளை விட ஒரு படி முன்னே இருக்கச் செய்பவர்கள்.

தரமான பொருட்களைத் தன் வாடிக்கையாளர்களுக்குத் தருவதையும், நேர்மையான வணிக நெறிமுறைகளைப் பின்பற்றுவதையும், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதையும் தன் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றி வரும் சக்தி மசாலாவின் பயணம் தொடரும்......

அன்று ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்தது இங்கிருக்கும் கருப்பு மிளகு மற்றும் மசாலா பொருள்களுக்காக. இன்று உலகெங்கும் உள்ளவர்களின் விருப்பமாகத் திகழ்பவை இந்திய உணவு வகைகள். அவற்றைத் தயாரிக்கும் வழி முறைகளை எளிமையாக்குவது சக்தி மசாலாப் பொடிகள்.

தளிர் என்ற சிறப்பு அமைப்பு சாலை ஓரங்களிலும், அரசு அலுவலக வளாகங்களிலும் மரக்கன்றுகள் நட்டுப் பராமரித்து வருகின்றது. மேலும் மரக்கன்றுகள் வேண்டுவோர்க்கு இலவசமாக வழங்கி இந்த மண்ணைப் பசுமையாக்கும் முயற்சியில் இயங்கி வருகின்றது. கிராமப் புறங்களிலுள்ள குளங்கள், குட்டைகள் தூர் வாருவதற்கும் பெருமளவில்

பொருளுதவி செய்து வருகின்றது. இது வரை சுமார் 75,000 மரக்கன்றுகளை வழங்கி இந்த பூமி பசுஞ்சோலையாக மாறிட தன் பங்கினை ஆற்றி வருகின்றது.

**வாழ்வாங்கு வாழ :**

சக்தி மசாலாவில் பணியாற்றும் 200க்கும் மேற்பட்ட உடல் ஊனமுற்ற பணியாளர்கள் சமுதாயத்தின் சுமை எனும் நிலையை மாற்றி அவர்களும் தன் கையே தனக்குதவி என தன்மானத்துடன் வாழ வழிவகை செய்வதற்கு ஒரு வாய்ப்பு கிட்டியதை எண்ணி சக்தி மசாலா பெருமையடைகின்றது.

குறையொன்றும் இல்லை என்று அவர்கள் சுறுசுறுப்பாய் பணியாற்றி நேர்மறை எண்ணங்களோடு மற்றவர்களுக்கு இணையாக செயலாற்றி வரும் காட்சி உண்மையில் மனதிற்கு மகிழ்ச்சியளிப்பதாகும். இவர்களின் தேவைகளை தனிக்கவனத்தோடு பூர்த்தி செய்வதில் சக்தி மசாலா அக்கறையும் ஆர்வமும் கொண்டு செயலாற்றி வருகின்றது.

**சக்தி மசாலாவின் சமுதாயப் பணிகள் :**

30 ஆண்டுகளுக்கு முன் மிகச்சிறு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்ட சக்தி மசாலா இன்று ஓர் ஆல விருட்சமாய் வளர்ந்து ஆயிரக்கணக்கானோருக்கு நேரடியாகவும், மறை முகமாகவும் வேலைவாய்ப்பு அளித்து அவர்களின் வாழ்க்கையில் ஒளிதீபமேற்றி வருகின்றது. சக்தி மசாலா நிறுவனம் வளரும் போது இந்தச் சமுதாயமும் வளர வேண்டும் என்ற அடிப்படை எண்ணத்திலும், சமுதாயத்தில் நலிந்தோருக்கு கை கொடுத்து அவர்களும் தன்னம்பிக்கையுடன் வாழ முடியும் என்ற எண்ணத்தினைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் உருவானதே சக்தி மசாலாவின் சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள்.

இத்திட்டங்களை நிறைவேற்றிட உருவாக்கப்பட்டதே சக்தி தேவி அறக்கட்டளை. இந்த அறக்கட்டளை செலாற்றி வரும் திட்டங்கள்:

- ❈ சக்தி மறுவாழ்வு மையம்
- ❈ சக்தி மருத்துவமனை
- ❈ தளிர் – மரம் வளர்ப்பு மற்றும் மழை நீர் சேகரிப்பு ஊக்குவிப்புத் திட்டம்.
- ❈ கல்வி உதவித் திட்டம்
- ❈ மருத்துவ உதவித் திட்டம்

பெருளாதார ரீதியில் பின்தங்கிய, நல்ல மதிப்பெண் பெற்றுள்ள மாணவ மாணவியர்க்கு மருத்துவம், பொறியியல் மற்றும் பிற கல்லூரிகளில் கல்வி பயில்வோர்க்கும் கல்வி உதவித் தொகை வழங்கி வருகின்றது.

மேலும் ஈரோடு மாவட்டத்திலுள்ள அரசு பள்ளிகளில் கழிப்பிடங்கள், கட்டிடங்கள் புதுப்பித்தல், மேல்நிலைத் தொட்டிகள் அமைத்தல், சோதனைக் கூடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் போன்ற கல்விப் பணிகள், இருதய அறுவை சிகிச்சைக்காக உதவித் தொகை மற்றும் பல்வேறு சமுதாயப் பணிகளைச் செயலாற்றுவதில் சக்தி மசாலா தன்னை முழு ஈடுபாட்டோடு அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

**வகித்துவரும் முக்கிய பதவிகளில் சில :**

1. 2005-2008 Chairman, Erode Mid Town Lions Club Charitable Trust which runs a home for the Elderly at Erode
2. Vice Chairman All India Manufacturers' Organisation (TNSB), Chennai.
3. E.C. Member, Tamilnadu Small & Tiny Industries Association, Chennai.
4. Vice Chairman, Erode Junior Chamber Charitable Trust which runs a Matriculation Higher Secondary School at Erode.
5. Founder & Chairman of Sakthidevi Charitable Trust, Erode which runs "Sakthi Rehabilitation Centre" for Physically Handicapped, "Sakthi Hospital" for General Public and "Sakthi Pharmacy." The Trust extends Financial Assistance to Heart Patients and Schlarships to Students. The trust also conducts intensive Tree Plantation Scheme in and around Erode District to make the earth green under Special Project named ''THALIR''
6. Vice President, The Southern Reginal Agricultural Products Manufacturers' a n d Exporters' Association, Chennai.
7. Member, Sales Tax Advisory Committe, Erode District, Erode.
8. Member, Erode District Manpower Planning Committee, Erode.
9. Local Level Committee Member in National Trust - 2004-07 (Ministry of Social Justics & Empowerment, Govt. of India)

10. Member, Confederation of Indian Industry, Southern Region, Chennai.

11. Life Member, Council for Fair Business Practices, Mumbai.

**தேசிய அளவிளான விருதுகள் :**

1. நேர்மையான வணிக நெறிமுறைகளுக்கான "ஜம்னாலால் பஜாஜ் விருது" இரு முறை **(1992,2001)**

2. தரமான தயாரிப்புகளுக்கான தேசிய விருது **(1994)**

3. தரமான தயாரிப்புகளுக்கான "ராஜீவ் காந்தி தேசிய விருது" (2005)

4. உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு நல்கியதற்கான "சிறந்த தொழிலதிபர் விருது" இரு முறை **(1998–2004)**

5. உடல் ஊனமுற்றோர் வாழ்வில் ஒளிதீபம் ஏற்றியதற்காகக் கிடைத்த மற்ற விருதுகள்.

   ஷெல் கெலன் கெல்லர் விருது.

   லிபா அன்னை தெரசா விருது.

6. சிறந்த தொழில் நிறுவனத்திற்கான IMM விருது.

7. வருமான வரித்துறையின் அதிக வருமான வரி செலுத்தியதற்கான சம்மான் பத்ரா விருது.

**மாநில விருதுகள்**

1. சிறந்த சிறு தொழில் நிறுவனத்திற்கான மாநில விருது மூன்று முறை


2. உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளித்ததற்கான "சிறந்த தொழில் அதிபர் விருது" - பல முறை

3. மாநில அரசின் "Safety Award" பல முறை.

   இன்னும் கணக்கிலடங்கா விருதுகள் சக்தி மசாலா நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

   இவருக்கு 'கொங்கு மாமணி' விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

## கொங்கு மாமணி



## கரூர் திரு. V.K. தங்கவேல்

திரு. V.K. தங்கவேல் அவர்கள் கருப்பண்ணகவுண்டர் – அம்மணியம்மாள் தம்பதியினருக்கு **1945** ஆம் ஆண்டு க. பரமத்தி ஒன்றியத்தில், வேலப்ப கவுண்டனூர் கிராமத்தில் ஆந்தை குலத்தில் பிறந்தார். இவருடைய துணைவியார் பெயர் திருமதி பழனியம்மாள். பாலச்சந்திரன் என்ற மகனும், பார்வதி என்ற மகளும் உள்ளனர். இருவரும் திருமணமானவர்கள்.

இவர் தென்னிலை உயர்நிலைப்பள்ளியில் படித்தவர். அரவிந் டிரேடர்ஸ் என்ற பெயரில் கரூரில் கைத்தறித் துணி உற்பத்தித் தொழிலில் உள்ளார். **1983** ஆண்டுமுதல் ஏற்றுமதி செய்துவருகிறார்.

நேர்மை தவறாத, நாணயமான, மனித நேயமான தொழிலதிபர்.

கைத்தறித் துணி ஏற்றுமதி நகரான கரூரில் கடந்த **25** வருடகாலமாக மற்ற கொங்கின தொழில் முனைவோருக்கெல்லாம் முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும், திகழ்ந்து, டெக்ஸ்டைல் தொழிலில் நவீன காபினெட் டையிங், சட்டில்லெஸ், லூம்ஸ் மற்றும் டெய்லரிங் துறைகளில் புதுமையைப் புகுத்தியவர்.

மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து விவசாயக் கூலியாக வாழ்க்கையைத் துவங்கி, டெய்லராக, ஊர் ஊராக ஜவுளி விற்பவராக, நூல் வியாபாரியாக, கைத்தறித் துணி உற்பத்தியாளராக உயர்ந்து இன்று கைத்தறித் துணி ஏற்றுமதியில் இந்தியாவின் முன்னணி நிறுவனமாக உலகத் தரச்சான்றான ISO 9001-2000 சான்றிதழ் பெற்று கொங்கின இளைஞர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக, ஊக்கமளிப்பவராக திகழ்ந்து வருகிறார். பெரிய அளவில் காற்றின் மூலம் மின்சாரம் தயாரிக்கும் (Non Conventional Energy - Wind Mills) தொழிலில் ஈடுபட்டு கரூர் நகர ஜவுளி ஏற்றுமதியாளர்களுக்கு

முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறார். விவசாயத்தொழிலில் இயற்கை வேளாண்மை முறைகளைக் கையாண்டு மற்ற விவசாயிகளுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறார்.

**சமூக சேவை**

1. பழனி முருகன் கோவில் மலை மேல் ரூபாய் 22 லட்சம் செலவில் முன் மண்டபம் கட்டிக் கொடுத்துள்ளார்.

2. **கரூரில் அனைத்து மக்களும் பயன்படுத்த நவீன மின் மயான அமைப்பை ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் செலவில் தானே முன்னின்று கட்டிக் கொடுத்துள்ளார்.**

3. கரூர் லயன்ஸ் கிளப் நடத்தும் மார்னிங் ஸ்டார் பள்ளி கட்டிட நிதி உதவியாக ரூபாய் 5 இலட்சம் கொடுத்துள்ளார்.

4. கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளை நடத்தும் கொங்கு மெட்ரிகுலேசன் பள்ளிக்கு ஒரு பிளாக் ரூபாய் 20 இலட்சம் செலவில் கட்டிக் கொடுத்துள்ளார்.

5. வருடந்தோறும் 250 பள்ளிக்குழந்தைகளுக்குச் சீருடை, நோட்டுப் புத்தகம் வழங்குதலும், 800 தொழிலாளர்களுக்குப் புத்தாடை வழங்குதலும் இவரால் நடைபெற்று வருகிறது. 1000 மரக்கன்றுகள் இலவசமாகவும் வழங்கி வருகிறார்.

**ஆன்மீகப் பணிகள்**

1. முன்னூர் செல்லாண்டி அம்மன் கோவில், கரூர் மாரியம்மன் கோவில், கரூர் பசுபதி ஈஸ்வரன் கோவில், கரூர் தாந்தோன்றிமலை கோவில், கரூர் பவித்திரம் பாலமலை கோவில் மற்றும் பிற கோவில்கள் திருப்பணி, அன்னதானம் ஆகியவற்றிற்குப் பெரும் பொருளுதவி செய்து வருகிறார்.

2. நாமக்கல் ஆஞ்சநேயர் ஆலயத்திற்கு ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் கட்டிடம் கட்டியுள்ளார்.

3. ஈரோடு திண்டல் மலைக் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு அன்னதானம் 1 இலட்சம் நபர்களுக்கு இவரால் வழங்கப்பட்டது.

4. திருச்சி ஸ்ரீரங்கம் கோயில் கோபுரவர்ணம் முழுவதும் இவரால் செய்து கொடுக்கப்பட்டது.

5. திருச்சி குணசீலம் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு 25 ஆயிரம் நபர்களுக்கு அன்னதானம் இவரால் வழங்கப்பட்டது.

6. மதுரை மீனாட்சி அம்மனுக்கு தங்கத்தாலி கொடி செய்து அணிவிக்க ஏற்பாடு செய்தார்.

7. திருப்பரங்குன்றம் முருகன் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 2 இலட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

8. திருவாரூர் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 1 இலட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

9. திருத்தணி முருகன் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 1 இலட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

10. திருவண்ணாமலை கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 5 இலட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

11. காளஹஸ்தி கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 1 இலட்சம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். சுசீந்திரம் கோவில் குடமுழுக்கு விழாவிற்கு 10 ஆயிரம் நபர்களுக்கு அன்னதானம் வழங்கினார். வருடந்தோறும் திருப்பதியில் புரட்டாசி மாதத்தில் அலங்கார மலர் வெளியிட ஏற்பாடு செய்துள்ளார்.

உழைப்பால் உயர்ந்த முதல் தலைமுறைத் தொழிலதிபர், ஆன்மீகவாதி, கல்வியாளர், கொடையுள்ளம் கொண்ட பெருந்தகை திரு. V.K. தங்கவேல் அவர்களுக்கு ‘கொங்கு மாமணி’ விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்
### இதுவரை கௌரவித்த
## சாதனையாளர்கள்

1995 – ஆம் ஆண்டு

| | | | |
|---|---|---|---|
| 1. | **பத்மஸ்ரீ ஆர்.எம். வாசகம்** | – | துணை வேந்தர், அண்ணா பல்கலைக்கழகம் சென்னை. |
| 2. | திரு. **R. வீரமணி** | – | தலைவர், ஜெம் கிரானைட்ஸ், சென்னை |
| 3. | டாக்டர் பழனி **ஜி. பெரியசாமி** | – | தலைவர், பி.ஜி.பி. குழும நிறுவனங்கள், சென்னை. |
| 4. | திரு. **R. காந்தி** | – | மூத்த வழக்கறிஞர், சென்னை. |
| 5. | திரு. எம். **மாசி** | – | தலைவர், அம்மன் கிரானைட்ஸ், அரூர் |
| 6. | திரு. **செ. தமிழ்மணி** | – | விஞ்ஞானி, பெங்களூர். |
| 7. | திரு. **ஆர். தீனதயாளு** | – | கணிப்பொறி வல்லுநர், ஐ.ஐ.டி, சென்னை |
| 8. | திரு. **பி. கொங்குவேள்** | – | செஸ் விளையாட்டு வீரர், சென்னை. |
| 9. | செல்வி. **பி. சுமதி** | – | செஸ் விளையாட்டு வீராங்கனை, |
| 10. | டாக்டர் **சி. பழனிவேலு** | – | அறுவை சிகிச்சை நிபுணர், கோவை |
| 11. | திரு. **R. தெய்வசிகாமணி** | – | விஞ்ஞானி, கல்பாக்கம் |
| 12. | செல்வன். **பி. நரேந்திரன்** | – | டென்னிஸ் வீரர், சென்னை. |

**1996 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 13. | செல்வி. **எம். நீலா** | – | மருத்துவக் கல்லூரி நுழைவுத் தேர்வில் அதிக மதிப்பெண். |

14. திரு. **எஸ். தனஞ்செயன்** – ஐ.ஏ.ஸ்

15. திரு. **பி. செந்தில்குமார்** – ஐ.ஏ.எஸ்

16. திரு. **வி.சி. பொருமாள், IPS** - ஐ.பி.எஸ்

17. திரு. **ஆர். செல்லப்பன்** - சிறந்த இளம் தொழிலதிபர், நியுமெரிக் பவர் சிஸ்டம்., சென்னை.

18. டாக்டர். **R. பால.சுப்பிரமணியன்** – சிறந்த சமூக சேவை.

19. திரு. **பி. குமாரசாமி** – சிறந்த ஏற்றுமதியாளர், திருப்பூர்.

20. செல்வன். **வி. அரவிந்தன்** – பரதநாட்டியம், சென்னை.

21. திரு. **ஆயி கவுண்டன்** – விஞ்ஞானி, பெங்களூர்.

**1997 ஆம் ஆண்டு**

22. செல்வி. **திவ்யா** – மருத்துவத் தேர்வில் முதல் இடம்.

23. திரு. **என். செல்வகுமார்** – 1986ம் ஆண்டு ஐ.ஏ.எஸ். தேர்வு

24. திரு. **செங்கதிர்** – 1997 ஆம் ஆண்டு ஐ.பி.எஸ். தேர்வு

25. திரு. **மலர் முத்துசாமி** – தொழில் துறையில் சிறப்பான உயர்வுக்காக

26. திரு. **பி.எஸ். செங்கோடன்** – பொதுப்பணி, திருச்செங்கோடு.

27. திரு. **C. குமாரசாமி** – கல்விப்பணி, ஈரோடு. சிறந்த தொழிலதிபர்,

28. திரு. **M. முருகேசன்** – சிறந்த தொழிலதிபர், சமூக சேவை, சென்னை.

29. சிலம்பொலி **சு. செல்லப்பனார்** – தமிழறிஞர்.

30. திரு. **பி.எச். பழனிச்சாமி** – கல்விப் பணி

31. திரு. **கே. வரதராஜன்** – மின்சார வாரியம், அரசுப்பணி.

32. திரு. **சிற்பி பாலசுப்பிரமணியன்** – இலக்கிய பணி

33. டாக்டர். **விஜயகுமார்** – சிறந்த மருத்துவர்.

34. திரு. **கே. முத்துசாமி** – கொங்குச் சமுதாயப்பணி

35. திரு. **N. கொளந்தசாமி** – கொங்குச் சமுதாயப்பணி

36. திரு. **S. அருணாசலம்**
முன்னாள் தலைவர் – கொங்குச் சமுதாயப்பணி

37. திரு. **P. தேவராஜன்**
முன்னாள் தலைவர் – கொங்குச் சமுதாயப்பணி

**1998 ஆம் ஆண்டு**

38. திரு. **M. இராமசாமி** – அம்மன் கிரானைட்ஸ், அரூர்.
சிறந்த எற்றுமதியாளர்.

39. டாக்டர். **ஜனகரத்தினம்** – கோபி, கல்விப்பணி.

40. டாக்டர் **நிர்மலா ராமமூர்த்தி** – சிறந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்.

41. திரு. **P.C. துரைசாமி** – சக்தி மசாலா, சிறந்த தொழில் அதிபர்

42. திருமதி **செல்லம்மாள்** – சிறந்த பெண் தொழிலதிபர்.

43. திரு. **M. சந்திரசேகரன்** – NSIT, சிறந்த தொழிலதிபர்.

44. திரு. **M. பொன்னுசாமி** – பியூர் மெமிகல்ஸ், சிறந்த தொழிலதிபர்

45. டாக்டர் **ராஜாமணி** – சிறந்த ஆராய்ச்சியாளர்

46. புலவர் **செ. இராசு** – சிறந்த கொங்கு ஆராய்ச்சியாளர்.

47. டாக்டர் **தாமோதரன்** – சிறந்த தடவியல் ஆராய்ச்சியாளர்

48. திரு. **கந்தசாமி** – நல்லாசிரியர்.

49. டாக்டர். **அன்பழகன்** – சிறந்த ஆராய்ச்சியாளர்.

50. திரு. **மயில்சாமி** – சிறந்த தொழிலதிபர்

**1999 ஆம் ஆண்டு**

51. திரு. **K. கந்தசாமி** – சிறந்த கல்விப்பணி

52. டாக்டர் **C. நமச்சிவாயம்** – சிறந்த கல்விப்பணி

53. டாக்டர் **A.M. சச்சிதானந்தம்** – சிறந்த கல்விப்பணி

54. டாக்டர் **G. குமாரவேலு IFS.,** – சிறந்த வனத்துறை ஆராய்ச்சியாளர்.

55. திரு. **K.R. மணி** – சிறந்த ஏற்றுமதியாளர்.

56. திரு. **S.V. குமரகுருபரசாமி** – சிறந்த ஏற்றுமதியாளர்.

57. டாக்டர் **ராஜா கவுண்டர்** – கணிப்பொறி ஆராய்ச்சி வல்லுநர்

58. திரு. **பொன்வண்ணன்** – திரைப்படத்துறை சிறந்த இயக்குநர்.

59. திரு. **C. முத்துசாமி** – சிறந்த சமுதாயப்பணி

60. திரு. **A. ஈசுவரன்** – சிறந்த கல்விப்பணி

61. டாக்டர் **V. இராமசாமி** – சிறந்த மருத்துவப் பணி

62. திரு. **V. பரமசிவம்** – சிறந்த ஏற்றுமதியாளர்.

63. திரு. **A.K. வெங்கிடசாமி** – தொழில் துறை

64. செல்வி **வினோதினி வாசுதேவன்** – கல்விச் சாதனை.

**2000 ஆம் ஆண்டு**

65. திரு. **சம்பத்குமார்** – கிரிக்கெட் வீரர், சென்னை.

66. திரு. **S. நாகல்சாமி** – ஐ.ஏ.ஏ.எஸ்., சென்னை.

67. செல்வி. **ஜெயந்தி** – வேளான் பல்கலைக் கழகம், கோவை.

68. திரு. **கன்னையன்** – **H.H.E.** கோவை.

| | | | |
|---|---|---|---|
| 69. | டாக்டர் **மணி** | – | சிறந்த மருத்துவர், நாமக்கல் |
| 70. | திரு. **K. பழனிசாமி** | – | கவின்கேர், சிறந்த தொழில் மேலாண்மை, சென்னை. |
| 71. | திரு. **கருப்பன்** | – | சிறந்த ஆசிரியர், நாமக்கல். |
| 72. | திரு. **K.K. சோமசுந்தரம்** | – | ஐ.ஃஎப்.எஸ்., சென்னை. |
| 73. | திரு. **காளியப்பன்** | – | தென்பாண்டியன் போக்குவரத்து, நாமக்கல். |
| 74. | திரு. **ஞானசேகரன்** | – | சட்டமன்ற உறுப்பினர், வேலூர் |
| 75. | திரு. **ஷண்முகம்** | – | சாந்தி எலக்ரிகல்ஸ், சென்னை. |
| 76. | திரு. **காசி** | – | இளம் தொழிலதிபர், ஜலகண்டாபுரம் |
| 77. | டாக்டர். **பாலசுப்ரமணியம்** | – | உமா கிளினிக், சென்னை. |
| 78. | திரு. **முத்துராஜா** | – | **G.T.P.** மார்பில்ஸ், சேலம். |
| 79. | திரு. **கோபால்** | – | சிறந்த தொழிலதிபர். |

**2001 ஆம் ஆண்டு**

| | | | |
|---|---|---|---|
| 80. | திரு. **எஸ்.கே. செங்கோடகவுண்டர்** | – | சிறந்த தொழிலதிபர், சேலம். |
| 81. | திரு. **கே. பொன்னுசாமி** | – | சிறந்த தொழிலதிபர், நாமக்கல். |
| 82. | திரு. **கா. அரங்கசாமி** | – | சிறந்த ஆராய்ச்சியாளர், தாராபுரம் |
| 83. | திரு. **கே.ஆர். அப்பாவு** முன்னாள் தலைவர் | – | சிறந்த தொழிலதிபர், சிறந்த சமுதாய சேவை, சென்னை |
| 84. | டாக்டர். **எஸ். அசோகன்** | – | சிறந்த மருத்துவர். |
| 85. | டாக்டர். **எம். கந்தசாமி** | – | சிறந்த கல்வியாளர், நாமக்கல். |
| 86. | திரு. **ஆர். செல்வராஜ்** | – | சிறந்த இளம் தொழிலதிபர் |
| 87. | திரு. **ஆர். ராஜேந்திரன்** | – | சிறந்த சமூக சேவையாளர், மேட்டூர். |
| 88. | செல்வி **காஞ்சி கைலாசம்** | – | இளம் விளையாட்டு (நீச்சல்) வீராங்கனை, சென்னை. |

2002 ஆம் ஆண்டு

89. திருமதி **பாரதி செங்கோட்டுவேல்** – சிறந்த கட்டிட வடிவமைப்பாளர், சென்னை

90. செல்வி **கே. செல்லமுத்து** – விவசாயிகள் நலப்பணி, ஈரோடு.

91. அரிமா **திரு.கே. தனபாலன்** – சிறந்த சமூக சேவைப்பணி, ஈரோடு.

92. திரு. **ஆர். கணேசன்** – சிறந்த இளம் தொழிலதிபர், நாமக்கல்.

93. திரு. **க. கிருஷ்ணமூர்த்தி** – நல்லாசிரியர் நாமக்கல்.

94. முனைவர் **எஸ். முத்து** – தொழில் நுட்ப கல்வி வளர்ச்சிப் பணி நாமக்கல்

95. திரு. **கே.பி. நடராஜன்** – சிறந்த தொழிலதிபர் (போக்குவரத்து), சேலம்

96. திரு. **பி.சி. பழனிச்சாமி** – சிறந்த வழக்கறிஞர், பெருந்துறை.

97. திரு. **S. பிரேம்துரை** – சிறந்த தொழிலதிபர், ஏற்றுமதியாளர், திருப்பூர்.

98. திரு. **M. ராமசாமி, இராசிபுரம்** – வேளாண்மைத்துறையில் சாதனை

99. பேராசிரியர்.
டாக்டர் **கே. சண்முகசுந்தரம்** – சிறந்த மருத்துவப் பணி

100. முனைவர் **இரா. வடிவேலன்** – இலக்கிய வளர்ச்சிப் பணி, ஈரோடு

101. திரு. **எஸ். வரதராஜன்** – அறிவியல் அறிஞர்.

102. திருமதி **சி. விஜயலட்சுமி** – சிறந்த கல்விப்பணி, சென்னை

**2003 ஆம் ஆண்டு**

103. திரு. **நல்ல கோவிந்தசாமி** – சிறந்த சமுதாயப்பணி, சென்னை

104. திருமதி **K. நல்லியப்பன்** – சிறந்த தொழிலதிபர், சென்னை

105. திரு. **J.P. லியோ கணேஷ்** – சிறந்த சமுதாயப்பணி, சென்னை

106. திரு. தங்கமணி **P.M. பழனிசாமி கவுண்டர்** – சிறந்த சமுதாயப்பணி, சென்னை

107. திரு. **K.V. காளியப்பன்** – சிறந்த பேராசிரியர் / ஆராய்ச்சியாளர் சென்னை

108. திரு. **Dr.R. பாலசுப்பிரமணியன்** – சிறந்த பேராசிரியர், சென்னை

109. திரு. **Dr.K.R. பழனிசாமி** – சிறந்த மருத்துவர், சென்னை

110. திரு. **செ. நல்லுசாமி** – சிறந்த விவசாயி, அரச்சலூர்.

111. திரு. **M. சிவப்பிரகாசம்** – தேசிய நல்லாசிரியர் விருது. நாமக்கல்.

112. திரு. **R. சாய்நாதன்** – சிறந்த சமூகப்பணி, ஈரோடு.

113. திரு. **S. ஜெயவேலன்** – சிறந்த சமுதாய முன்னேற்றப்பணி பெங்களூர்.

114. திரு. **K. சிவலிங்கம் சகோதரர்கள்** – சிறந்த கல்விப்பணி, அந்தியூர்.

115. திரு. **V. அன்பழகள் /V. சுந்தரேசன்** – சிறந்த தொழிலதிபர்கள், சென்னை.

116. திரு. **Dr. உமா செல்வராஜ்** – சிறந்த சமூக சேவகி, சேலம்.

117. **Dr. R. சாந்தி** – சிறந்த மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் விஞ்ஞானி.

2004 ஆம் ஆண்டு

118. முனைவர் மே.அ. **வேலுச்சாமி** – கல்விப்பணி, திருச்செங்கோடு

119. தேவத்தூர் **நா. நாச்சிமுத்து** – கல்விப்பணி, ஒட்டன்சத்திரம்

120. திரு. **வ. ஈஸ்வரமூர்த்தி** – கல்விப்பணி, கோவை

121. திரு. **யு.ஆர். சின்னச்சாமி கவுண்டர்** – சிறந்த சமுதாயப்பணி, ஈரோடு

122. திரு. **ம. குமாரசாமி** – சிறந்த சமுதாயப்பணி, கரூர்

| | | |
|---|---|---|
| 123. டாக்டர் **வீ. செல்லப்பன்** | – | சிறந்த சமுதாயப்பணி, கரூர் |
| 124. ஆசிரியர் **தி.செ.பழனிவேலு** | – | சிறந்த சமுதாயப்பணி, ராசிபுரம் |
| 125. திரு. **டி.கே. சுப்பிரமணியன்** | – | சிறந்த சமுதாயப்பணி, சென்னை |
| 126. திரு. **எஸ்.பி. கோபால கிருஷ்ணன்** | – | சிறந்த சமுதாயப்பணி, ஈரோடு |
| 127. திரு. **ஆ. ராமசாமி / பெ. சாமிநாதன்** | – | சிறந்த சமுதாயப்பணி, சென்னை |
| 128. திரு **கே.ஜி. பிரகதீஸ் குமார்** | – | விவசாயத்துறை, கோபி. |
| 129. டாக்டர் **எஸ். தனபாக்கியம்** | – | சிறந்த மருத்தவப்பணி, ஈரோடு |
| 130. டாக்டர் **எம்.என். பொன்னுசாமி** | – | சிறந்த கல்விப்பணி, கோவை |
| 131. திரு. **அ.பொ. கந்தசாமி** | – | சிறந்த சமுதாயப்பணி, கரூர் |
| 132. டாக்டர் **சி. ராய்யப்பா** | – | சிறந்த மருத்துவப்பணி, சென்னை |
| **2005 ஆம் ஆண்டு** | | |
| 133. திரு. **கே.அம்மையப்பன்** | – | சிறந்த சமுதாயப்பணி, கரூர் |
| 134. திரு. **என்.கே. சின்னச்சாமி** | – | சிறந்த கல்விப்பணி, நாமக்கல் |
| 135. திரு. **அரங்க துரைராஜ்** | – | சிறந்த சமுதாயப்பணி, கர்நாடகா |
| 136. சேர்மன் **ஆர். நடேசன்** | – | சிறந்த சமுதாயப்பணி, திருச்செங்கோடு |
| 137. திரு. **கே. கருப்பையா** | – | சிறந்த சமுதாயப்பணி, சேலம் |
| 138. திரு. **தே.ப. சின்னசாமி** | – | சிறந்த சமுதாயப்பணி, சேலம் |
| 139. டாக்டர். **கே.எஸ். பழனிச்சாமி** | – | சிறந்த கல்விச் சேவை, ஈரோடு |
| 140. பேராசிரியர். **பி. சின்னசாமி** | – | சிறந்த சமுதாயப்பணி, ஈரோடு |
| 141. சிந்தனைக் **கவிஞர் கவிதாசன்** | – | சிறந்த எழுத்தாளர், கோயம்புத்தூர் |
| 142. டாக்டர். **பி. ஏகநாதன்** | – | சிறந்த அறிவியல் விஞ்ஞானி, ஈரோடு |

143. போஸ்ட் **பி. முத்து** – சிறந்த சமுதாயப்பணி, கரூர்

144. டாக்டர் **ஆர். ராஜவேலு** – சிறந்த மருத்துவப்பணி, திருச்செங்கோடு

145. அருமைக்காரர் **பொன்னுசாமி கவுண்டர்** – சிறந்த சமுதாயப்பணி,

146. திரு. **இள. தங்கதுரை** – சிறந்த கல்விப்பணி, கரூர்

147. திரு. **எஸ்.கே. சுப்பிரமணியம்** – சிறந்த கல்விப்பணி, கோவை

148. செல்வி **Y. பிரதிபா** – செஸ் சாதனையாளர், ஈரோடு

## கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் முனைவர் கா. அரங்கசாமி

ஈரோடு, பூந்துறை வடக்கு செள்ளியம்பாளையத்தில் 1937 ஆம் ஆண்டு பிறந்தவர். அந்தக் காலத்திலேயே நாகர் கோவிலில் **B.A.** தமிழும், மதுரை தியாகராசர் கல்லூரியில் **M.A.** தமிழும் படித்தவர். 1980ல் **PSG** கல்லூரியில் **M. Phil.** பட்டம் பெற்றவர். 1986ல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் கல்வெட்டுக்களில் அறிவியல் கோட்பாடுகள் என்பதை ஆய்வு செய்து **Ph.D.** பெற்றார்.

1961 முதல் 1968 வரை ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1968 முதல் 1996 வரை கோபி கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து பொறுப்பு முதல்வராக ஓய்வு பெற்றவர்.

அந்தப் பகுதியிலிருந்து படித்து முன்னேறியிருக்கும் நம் சொந்தங்கள் அனைவருக்கும் பரிச்சயமானவர். சென்னைப் பல்கலைக் கழக கல்வியியல் குழு உறுப்பினர், பாரதியார் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினர், தேர்வுக் குழு தலைவர், பாடத்திட்டக்குழு தலைவர், தொலைக் கல்விப்பாடம் எழுதும் குழு தலைவர், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் வினாத்தாள் குழுத் தலைவர் என்று பல பொறுப்புகளை வகித்தவர்.

25க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு **Ph.D** பட்டம் பெற வழிகாட்டியாக விளங்கியவர். தொடர்ந்து பாரதியார், அண்ணாமலை, மதுரை காமராசர், அன்னை தெரசா பல்கலைக் கழகங்களில் ஆய்வு நெறியாளராக இருப்பவர்.

குன்றக்குடி அடிகளார் தலைமையில் இயங்கும் உலகத் திருக்குறள் பேரவையில் மாநில அமைப்பாளராக இருந்து பல மாநாடுகளை நடத்தி வருகிறார். தென்னிந்திய வரலாற்றுப் பேரவைத் தலைவராக இருந்து கருத்தரங்குகள் பல நடத்தி வருகிறார்.

12க்கும் மேற்பட்ட ஆய்வு மற்றும் படைப்பிலக்கியங்களை அறிவரசு பதிப்பகத்தின் சார்பில் வெளியிட்டுள்ளார். இலண்டன் சிவன் கோயில்கள் அமைப்பிற்காக சிவசமய வரலாறு எழுதி வருகிறார். சென்ற வருடம் 12 ஐரோப்பிய நாடுகளில் 5 மாதங்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சிகளிலும் சொற்பெருக்கு ஆற்றியவர்.

கொங்கு நாட்டில் கல்வெட்டுக்கள், 100க்கும் மேற்பட்ட ஒலைச்சுவடிக் கட்டுகள் தேடி வெளிப்படுத்தியதுடன் நாட்டுப்புறப்பாடல் தொகுப்பும் விரைவில் வெளியிட உள்ளார்.

கொங்கு வேளாளர் கூட்டங்களின் வரலாறு, குல தெய்வங்கள், நாகரீகம் பற்றி 100க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.


தீரன் சின்னமலை பற்றி 15க்கும் மேற்பட்ட கும்மிப் பாடல்களைத் தேடி வெளியிட்டிருக்கிறார்.

கடந்த பல வருடங்களாகப் பேராசிரியரின் பணிகள் அனைத்தும் கொங்குச் சமுதாயம் சம்பந்தப்பட்டதாகவே இருக்கின்றன. தான் தோன்றிய சமுதாய முன்னேற்றத்தை தன் காலத்தில் கண்டு விட வேண்டுமென்ற குறிக்கோளுடன், ஒரு தாகத்துடன் அவர் செயல்படுவது அவர் செயல்பாடுகளில் பளிச்செனத் தெரிகிறது. கொங்கு அமைப்புகள் தோன்ற துணை நிற்பது, வளர முயற்சி மேற்கொள்வது என்று தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளார். சமுதாய அமைப்புகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டுள்ளார்.

தமிழ் மாநில கொங்குப் பேரவையின் இலக்கிய அணிச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றுகிறார். பேரவைப் பத்திரிகையின் இணை ஆசிரியராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவ்வளவு சிறப்பு மிக்க பேராசிரியரின் துணைவியார் பள்ளிப்படிப்பே படித்திருந்தாலும், திருவாசகம் முழுவதும் மனப்பாடமாகச் சொல்லக் கூடியவர். சமய இலக்கியங்களில் ஆழ்ந்த அனுபவம் உள்ளவர்.

மூத்த மகன் திரு. அன்பரசு தமிழகத்தில் **MBBS., MD**படித்துவிட்டு இங்கிலாந்தில் பணிபுரிந்து வருகிறார். இராண்டாம் மகன் பொறியியல் பட்டம் படித்தவர். இப்போது ஒசூர் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றுகிறார்.

## கொங்கு சாதனையாளர்



## C.ஆறுமுகம்

கோயம்புத்தூர் மாவட்டம், சாமநாய்க்கன்பாளையம் கிராமத்தில் **1939** ஆம் வருடம் விவசாயக் குடும்பத்தில் சின்னப்பகவுண்டர் – அங்கம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். மனைவி பெயர் திருமதி கண்ணம்மாள். மூத்த மகன் டாக்டர் சிவசெந்தில் அமெரிக்காவில் டாக்டராக இருக்கிறார். இளைய மகன் கார்த்திகேயன் அமெரிக்காவில் **Motorola** கம்பெனியில் பொறியாளராகப் பணியாற்றுகிறார்.

திரு. ஆறுமுகம் அவர்கள் **B.E.** (Civil) படிப்பை சென்னை பல்கலைக்கழத்திலும் **M.E.** (Civil) ரூர்கேலாவிலும் படித்தவர். **1962** முதல் **1997** வரை தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பல பொறுப்புகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

பணிக் காலத்தில் தமிழகம் பயன் பெறும் வகையில் பல பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, தான் பிறந்த கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமையைத் தேடித் தந்தவர். பரம்பிக்குளம் அணைக்கட்டுப் பணி, ஆழியார் அணைக்கட்டின் நீர்க் கசிவை கண்டுபிடித்து அடைத்து அணையைக் காப்பாற்றியவர். ஆந்திராவிலிருந்து மரக்காணம் வரை பக்கிங்காம் கால்வாயின் மேம்பாட்டுத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றியவர்.

பொதுப் பணித்துறை அலுவலகம், எழிலகம், பிரசிடென்சி கல்லூரி, குயின்மேரிஸ் கல்லூரி அலுவலகம் ஆகிய கட்டடங்களைக் கண்காணித்து வந்தவர். திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நிலத்தடி நீர் ஆதாரங்களைப் பெருக்கியவர்.


சென்னையில் சிறப்புமிக்க டைடல் பார்க் கட்டிடத்தைத் திட்டமிட்டு உருவாக்கியதில் முக்கியப் பங்காற்றியவர்.

இன்னும் ஓய்வெடுக்காமல் தகவல் தொழில் நுட்பம் சம்பந்தப்பட்ட கட்டடங்கள் பல உருவாவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறார்.

கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகப் பணியாற்றி சமுதாய சேவை செய்தவர்.

சென்னை கிண்டியில் தீரன் சின்னமலை சிலை உள்ள இடம் நமக்குக் கிடைப்பதற்குக் காரணமாக இருந்தவர். சம்பந்தப்பட்ட இடத்தின் தலைமைப் பொறியாளராக இருந்த நேரத்தில் சிலையின் பீடத்தை வடிவமைத்து உருவாக்கி அங்கு சிலை அமைக்க பெரிதும் உதவியவர்.

# கொங்கு சாதனையாளர்



## க.கு.கோ. சுகுமாறன்

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினானும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன்
போர்ந்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகிறேன்.

– விநாயக புராணம்

தனது முன்னோர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஸ்ரீராம விண்ணகரில் கோயில் கொண்டு திருவருள் புரிந்துவரும் அண்ணல் கோதண்டராமனின் திருக்காட்சிகளைக் குழந்தைப் பருவத்திலிருந்தே கண்டு வந்தவர் திரு.க. கு.கோ.சுகுமாரன், பி.ஏ., அவர்கள். சுடர்விட்டுப் பிரகாசிக்கும் ஆன்மீக ஒளியில் இவர் கடந்து வந்த 62 ஆண்டு காலத்தில் எண்ணற்ற அறைவடிவங்களைக் கண்டு பக்திப் பரவசம் அடையும் பேறு இவருக்கு எளிதாகக் கிட்டியுள்ளது.

இயற்கை எழிலாகக் கொண்டு திகழும் கள்ளிப்பட்டி எனும் சிற்றூரில் 20.11.1944–ல் க.கு.கோதண்டராமன் – சாரதாம்பாள் தம்பதியருக்குத் திருமகனாகத் தோன்றினார் சுகுமாரன். உடன் பிறந்த சகோதரிகள் அறுவருடன் இளமைப் பருவம் இனிமையாகக் கழிய, பட்டப் படிப்பும், மணவாழ்வும், இரு மைந்தர்களும் கொண்ட இல்லற வாழ்வையும் இனிதே வாழ்ந்து வருகிறார் இவர்.

1951 ஆம் ஆண்டு சென்ன **Goodsheperd Convent** ல் படிப்பைத் தொடங்கி ஏர்க்காடு **Monford** உயர்நிலைப்பள்ளியில் படித்து, கோவையில் பள்ளிப்படிப்பை முடித்து, கோவை அரசினர் கலைக் கல்லூரியில் **B.A.,** ஆங்கில இலக்கியப் பட்டம் பெற்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்த இறைவனடி சேர வேண்டுமன்றோ! கள்ளிப்பட்டியில் தாத்தா குட்டியாக் கவுண்டர் அவர்களால் அவர்தம் சொந்த செலவில் ஸ்ரீ ராமவிண்ணகரத்துக் கோதண்டராமன் கோயில் உருவானது. அவர்தம் இறைப்பணி நிறைவேற, அவரது தந்தையார் அமரர் சென்னிமலைக் கவுண்டர் அவர்களின் அறவாழ்க்கை உறுதுணையாக நின்றது.

ஊரில் பிறக்கும் ஏழைக் குழந்தைகளுக்கெல்லாம் இலவசமாகப் பால் ஊற்றி வளர்த்த அப்பெருந்தகையாளரின் ஈகைப் பண்பு, வழி வழியாக இக் குடும்பத்தினரைத் தொடர்ந்து உய்விக்கின்றது.

தந்தையார் அமரர் க.கு.கோ. அவர்கள் ஸ்ரீ ராமவிண்ணகரத்துக் கோதண்டராமனிடம் தன்னையே அர்ப்பணித்தவர். அவர் பெருமானின் பெருமைகளை உலகறியச் செய்யும் முயற்சிதான் அரை நூற்றாண்டு காலமாக வைகுண்ட ஏகாதசித் திருநாளன்று கம்பர் விழாவாக அரங்கேற்றப்பட்டு வருகின்றது. அந்நாளில் இராமபிரானின் திருவருளைப் பெறவும், கம்ப நாடனின் கவித்திறனை உணரவும், கன்னித் தமிழின் தீஞ்சுவையைப் பருகிடவும் அங்குக் கூடும் கூட்டம் தான் எத்தனை! எத்தனை!

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
எந்நோற்றான் கொல்எனும் சொல் –

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க தந்தையின் மறைவிற்குப் பின் அவர் விட்டுச் சென்ற இறைப்பணியையும், இலக்கியப்பணியையும் குன்றாமல் முன்னெடுத்துச் செல்லும் திரு. க.கு.கோ.சுகுமார் அவர்களின் ஆன்மீகத் தொண்டு போற்றுதற்குரியது.

காசியில் தானம், தவம், ஜயம், பூஜை போன்ற நல்வினைகளைத் தினையளவு செய்தாலும் பனையளவு நற்பயன்களைப் பெறலாம் என்ற பெரியோர் வாக்குப்படி திரு. சுகுமாரன் அவர்கள் 15 ஆண்டுகளாகத் தொடர்ந்து காசிக்குப் பயணம் மேற்கொண்டு வருகிறார். தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வேண்டும் என்ற நோக்கில் தம்மோடு பல இறையன்பர்களையும் அழைத்துச் சென்று இறைவன்பால் ஈடுபாடு கொள்ளச் செய்து வருகின்றார்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர் –

என்பதற்கேற்ப,

வேளாண் தொழிலை மேற்கொண்டுவரும் திரு. சுகுமாரன் அவர்கள் வேளாண்மைக்கு மட்டுமின்றி உயிரினங்களுக்கே உயிராய் விளங்கும் தண்ணீரின் தேவையை நிறைவேற்றும் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

தந்தையாரின் பெருமுயற்சியால் வெட்டப்பட்ட பெருமுகை – அத்தாணி கிளைவாய்க்கால் மூலம் பவானி ஆற்று நீர் கொண்டு செல்லப்பட்டு, பல நூறு விவசாயக் குடும்பங்கள் வளமுடன் வாழ்ந்து அவர்தம் பெருமையினை நாளும் எடுத்தியம்பி வருகின்றன. அவ்வாய்க்காலில் அவ்வப்போது நிறைவேற்ற வேண்டிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், தண்ணீர்த் தட்டுப்பாட்டினைப் போக்கவும், பவானி நதிநீர் பாசனப் பாதுகாப்புச் சங்கத்தை உருவாக்கி, அதன் செயலாளாராகப் பொறுப்பேற்றுச் சிறந்த முறையில் சமூகப் பணி ஆற்றி வருகின்றார்.

தாயும், தந்தையும், உற்றோரும், மற்றோரும் போற்றிப் புகழும் வண்ணம் அறவாழ்வு வாழ்ந்து, இறைப்பணி ஆற்றி, சமுதாயத்திற்கு உதவி, பயன்மிகு கற்பகத்தருவாக வாழ்ந்து வரும் திரு. க.கு.கோ. சுகுமாரன் அவர்களும், அவர்தம் குடும்பத்தினரும் நீடுழி வாழ்ந்து நலம் பலவும் பெற்றிட இறையருள் கிட்டுவதாக.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் பவளன் ப. கிருஷ்ணசாமி

பொள்ளாச்சி வட்டம், கப்பலாங்கரை அருகில், கோப்பனூர் புதூர் கிராமத்தில் 1952 ஆம் வருடம் பழனிச்சாமி கவுண்டர் – வள்ளியம்மாள் தம்பதிக்கு பவளன் கூட்டத்தில் பிறந்தார். **M.A., MED., Phd** படித்த டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

தற்போது பெங்களூரில் வாழ்ந்து வரும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களின் துணைவியார் திருமதி மல்லிகா பிரெஞ்ச் மொழி பேராசிரியையாக கிறைஸ்ட் கல்லூரியில் பணியாற்றுகிறார். இவர்களுக்கு இரண்டு மகன்கள். ஒருவர் மருத்துவம் படிக்கிறார். மற்றொருவர் பல்தொழில் பயிற்சியில் இருக்கிறார்.

கிராமியப் பண்பாடுகள் பலவற்றை ஆய்வு செய்வதில் ஈடுபாடு கொண்டவர். பதிப்புத்துறையில் ஆர்வம் கொண்டவர். 2001 ஆம் ஆண்டிலிருந்து “Centre for Publication” ன் ஒருங்கிணைப்பாளராக இருந்து வருகிறார்.

தமிழில் பாரதியைப் புரிந்து கொள்ளுதல் மற்றும் க.நா.சு; மௌனி, புதுமைப்பித்தன், ஜெயகாந்தன் ஆகியோரைப் பற்றி இலக்கியத்தடம் என்ற பெயரில் நூல்கள் எழுதி உள்ளார்.

கொங்கு நாட்டு வரலாறு என்ற நூலையும், “விழாக்காலம்” என்ற கவிதைத் தொகுப்பும், “அடிவாழை” என்ற சிறுகதைத் தொகுப்பும் எழுதி வெளியிட்டுள்ளார்.

மனைவி, திருமதி மல்லிகாவுடன் இணைந்து **Michel Sauquet** பிரெஞ்ச் மொழியில் எழுதிய நாவல் ஒன்றை, “சமுத்திரத்தில் ஒரு மைத்துளி” என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

கன்னடத்தில் வெளியான பூரண சந்திர தேஜஸ்வியின் “சிதம்பர ரகசியத்தை”, தமிழில் சிறப்பாக மொழி பெயர்த்ததற்காக “சாகித்ய அகாடமி” விருது பெற்றுள்ளார். அண்ணமார் கதை பற்றிய ஆய்வுகளை நடத்தி உள்ளார்.

கர்நாடகக் கவுண்டர் சேவா சங்கத்துடன் பல ஆண்டுகளாக ஈடுபாடு கொண்டவர். காராளர் என்ற இதழைத் தோற்றுவித்து நடத்தி வந்துள்ளார். கர்நாடகக் கவுண்டர் சேவா சங்கத்தின் செயல்பாடுகள் அனைத்திலும் முழுமையாகத் தன்னை இணைத்துக் கொண்டு கொங்குச் சமுதாயச் சேவையாற்றி வருபவர். நம் குலப் பெயர்களை நம் பெயரோடு இணைத்துப் பயன்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி வருபவர்.

# கொங்கு சாதனையாளர்



## பேராசிரியர் ப. கந்தசாமி

பேராசிரியர் ப. கந்தசாமி. ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் கணிதப் பேராசிரியராக கடந்த 33 ஆண்டுகளாகப் பணிபுரிந்தவர். விடுமுறை நாட்களில் நிச்சயம் இவரை ஈரோட்டில் காணமுடியாது. எங்காவது மலைக்காடுகளில் மாணவ, மாணவியருடன் நடந்து கொண்டு காடுகளின் மகத்துவம் பற்றியும், அதனைக் காக்க வேண்டிய அத்தியாவசியம் பற்றியும் வகுப்பெடுத்துக் கொண்டிருப்பார். தன் இனிய, எளிமையான, ஆனால் கவிதை கலந்த தமிழ்ப் பேச்சால் அனைத்து மாணவ உள்ளங்களையும் கவர்ந்தவர். மாணவர்களால் **Uncle** என்று அன்பாக அழைக்கப்படுபவர். இவரது இயற்கைக் காப்பு கல்விப் பணியைப் பாராட்டி தமிழ்நாடு வனத்துறை இவருக்கு கௌரவ வன உயிரினப் பாதுகாவலர் **(Hon. Wildlife Warden),** உறுப்பினர் **State Board for Widlife** என்ற பதவிகளையும் வழங்கியுள்ளது.

பேராசிரியர் ப. கந்தசாமி அவர்கள் 1948 ஆம் ஆண்டு கரூருக்கு அருகே கந்தசாரப்ப்பட்டி என்ற சிறிய கிராமத்தில் பிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பண்பட்டார். பெற்ற தாயுடன், மனைவி, ஒரு மகன், மகளுடன் ஈரோட்டில் வசித்து வருகிறார்.

வனச் சுற்றுச் சூழல் கல்விப் பணியில் 20 ஆண்டுகளாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். இதுவரை 1 லட்சம் மாணவர்களுக்கு மேல் இவருடைய வனச் சுற்றுச்சூழல் கல்வியில் பங்கேற்று உள்ளார்கள். இயற்கையைப் போற்ற வேண்டும், நேசிக்க வேண்டும், காக்க வேண்டும் என்ற கருத்துகளை ஆழப் பதிய வைக்கிறார்.

6000 அடிக்கு மேல் உள்ள மலைகாடுகளில் நீரோடை ஓரம் அல்லது அழகிய ஏரிக்கரை ஓரம் கூடாரம் அமைத்து மாணவர்களை நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்க வைத்து அடர்ந்த காடுகளுக்குள் நடைப்பயணம் மேற்கொண்டு அந்த மாணவர்களை இயற்கையை நேசிக்கும், காக்கும் இளம் படையினராக மாற்றி அனுப்பும் அரிய பணியினைச் செய்கிறார்.

இவர் செய்து வரும் இந்த 22 வருட தொடர்ந்த சாதனைக்கு உந்துதலும், உரிய ஆலோசனைகளும், உதவிகளும், செய்ததும் செய்து கொண்டிருப்பது தமிழ்நாடு வனத்துறையே. இந்தப் பூமியின் வாழ்க்கை நீட்டிப்புக்கு, மனிதர்களின் வளமான வாழ்விற்கு இவர் செய்து வரும் இந்தப் பணி பாராட்டுக்குரியது.

15 வருடங்களாக கானுயிர் வாரவிழா போன்ற விழாக்களில் கானுயிர்ப் பாதுகாப்பு பற்றி பல மேடைகளில், பல இடங்களில் உரையாற்றி இருக்கிறார். உலக மலைகளின் ஆண்டைக் கொண்டாடுவதற்காக இந்திய அரசு கொடைக்கானலில் ஏற்பாடு செய்திருந்த கானக விஞ்ஞானிகளின் பட்டறையில் கானகக் காப்பு பற்றி வகுப்பெடுத்தார்.

07.01.06 அன்று பாரதி வித்யா பவன் பள்ளி விழாவில் வனத்துறை உதவியோடு **A Companion of nature Learners** என்று இவர் எழுதிய புத்தகம் வெளிபிடப்பட்டது.

ஈரோடு காவேரி **Junior Chamber** அமைப்பு 1994 **outstanding Citizen Award** கொடுத்துக் கௌரவித்தது, ஈரோடு **Green city** ஜேசீஸ் அமைப்பு 1988ல் **Topliner Award** வழங்கியது. 1996 லிருந்து ஈரோடு மாவட்டத்தின் கௌரவ வன உயிரினக் காப்பாளராக இருந்து வர தமிழக அரசும், வனத்துறையும் ஏற்பாடு செய்துள்ளன.

கல்கி, ஆனந்த விகடன், தினமலர், **The Hindu, Business Line** போன்ற பத்திரிகைகள் இவரது முயற்சியினையும், முகாம்களையும் பாராட்டி எழுதி உள்ளன. ஈரோடு இந்திய மருத்துவர்கள் சங்கம் 01.07.2001-ல் அவரது செயல்பாடுகளைப் பாராட்டிக் கௌரவித்தது.

தமிழக வனத்துறையும், தமிழ்நாடு அரசும் **30.09.2003** அன்று தமிழ்நாடு வன உயிரின வாரியத்தில் ஓர் உறுப்பினர் பதவி கொடுத்துக் கௌரவித்தது.

ஒரு விடியலுக்கான புதிய அத்தயாயத்தை புரட்டிக் கொண்டிருக்கும் ஒரு புரட்சியாளர் இவர். பேராசிரியர் கந்தசாமியின் கலாச்சார சேதாரமில்லாத இந்தக் களப்பணியும் நாளைய சமுதாயத்திற்கு சிலந்தி வலையின் அதிர்வை ஏற்படுத்தும் என்று நிச்சயமாக நம்புகிறோம். இவருடன் செல்லும் வனவாசம் **"Ego"**கலைந்தது. **"Eco"**கலந்தது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. R. இராமசாமி

திரு. R. இராமசாமி அவர்கள் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் சுல்லிப்பாளையம் கிராமத்தில் பிறந்தவர். இவர் 1937ம் வருடம் பிப்ரவரி மாதம் தன்னுடைய 13வது வயதில் பெற்றோருடன் மலேசியாவிற்குப் பிழைப்பைத் தேடிச் சென்றார்.

சுல்லிப்பாளையத்தில் உள்ள பள்ளியில் ஆசிரியர் திரு. ரத்தினசபாபதி பிள்ளை அவர்களிடம் கல்வி கற்ற போது, அவருடைய அன்றாட போதனையில் பாடத்தை விட தேசத்தை வெள்ளையரிடம் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அறிவுரையில் உந்தப்பட்டு தேசப்பற்று மிகுதியால், 1943–ம் ஆண்டு தனது 19வது வயதில், டோக்கியோவில் இருந்து இந்திய தேசியப் படைக்கு ஆள் சேர்க்க மலேசியாவிற்கு வந்த சுபாஸ் சந்திரபோஸ் அவர்களைச் சந்தித்து நாட்டுப்பற்றுக் காரணமாக அவருடைய 60–வயது தாயைப் பிரிந்து ஐ.என்.ஏ.வில் சேர்ந்தார்.

அதன்பின்னர், மலேசியா, சிங்கப்பூர், பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று ஐ.என்.ஏ.வில் பணியாற்றியுள்ளார்.

1947 க்குப் பின் அங்கு உள்ள எஸ்டேட்டில் வேலை செய்து தமது குடும்பத்தைக் காப்பாற்றி, இன்று மலேசியா குடியுரிமை பெற்றவராக இருக்கிறார்.


இந்திய தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய இவருக்கு இந்தியாவில் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு உள்ள ஓய்வு ஊதியம் மறுக்கப்பட்டுள்ளது என்பது வருந்தத்தக்கது.

தற்போது 88 வயதாகும் திரு. இராமசாமி கவுண்டர் அவர்கள் இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரை, ஊழல் இல்லாத ஆட்சி இந்தியாவில் வந்தால் தான்

இந்திய நாடு முழுசுதந்திரம் அடைந்ததாகக் கருதப்படும் என்பதாகும். சுத்தமான ஆட்சி அமைய நேர்மையோடு நாட்டுப்பற்று, மக்களுக்காகப் பாடுபடும் பொதுநலநோக்கு கொண்ட இளைஞர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்கிறார் இவர்.

அயல் நாட்டில் இருந்தாலும், தாய்நாட்டின் மீது உள்ள பற்றை மறவாத இந்த **88–**வயது இளைஞரின் சாதனையைப் பாராட்டி 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்குவதில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பெருமை கொள்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## S. ராஜேஸ்

உன்னால் முடியும் தம்பி; முடியும் என்று நம்பினால் முடியாதது எதுவுமில்லை; கொங்குச் சமுதாயத்தின் கடின உழைப்புக்கு அனைத்து சாதனைகளுமே அடிமை. இங்குச் சாதனை படைத்திருக்கும் திரு. ராஜேஸ் பிறவியிலேயே 85சதவீதம் ஊனமுற்றவர். ஏழை விவசாயச் குடும்பத்திலே பிறந்த ராஜேஸ் பள்ளியில் எல்லா வகுப்புகளிலும் முதல்வனாகத் தேறி, +2வில் பள்ளியிலேயே முதல் மாணவனாகத் தேர்ச்சியடைந்தார். ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரியில் **BE (Computer Science)** படித்தார். ஊனத்தை ஊமையாக்கி விட்டு அவர் சாதிக்க எடுத்த முயற்சிகளும், கஷ்டங்களும் எப்படி இருந்திருக்கும் என்பது அவரைப் பார்த்தாலே நமக்குப் புரியும். ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில் அருகில் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த இவரின் தந்தை இவர் கூடவே இருந்து அன்றாடக் கடமைகளை ஆற்றி இந்தச் சாதனையை நிகழ்த்தக் காரணமாக இருந்ததால் அவரும் சாதனையாளர் தான்.

பெற்றவர்களுக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கும் ராஜேஸ், **1984** ஆம் வருடம் திரு **M.R.** சுப்ரமணியம் – திருமதி சாரதாம்பாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

ஈரோடு கொங்கு பொறியியல் கல்லூரியில் படிக்கும் போது பல பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். இவரைப் பற்றிய செய்திகளும், சாதனைகளும் பத்திரிகைகளில் தொர்ந்து வந்த வண்ணம் இருந்தன. டெல்லியில் திருமதி சோனியா காந்தி அம்மையாரால் பாராட்டப்பட்டது மிகவும் சிறப்பானதாக நினைவு கூறவேண்டியதாகும்.

திரு ராஜேஸீன் படிப்புச் செலவிற்காக **2002** ஆம் ஆண்டு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் பண உதவி அளித்திருக்கிறது. அவருடைய சாதனைக்கு நாமும் உதவியிருக்கிறோம் என்பது சென்னையில் சங்கம் உருவாக்கியவர்கள் பெருமைப்பட வேண்டியதாகும்.

படித்து முடித்து சென்னையில் ஒரு கம்ப்யூட்டர் கம்பெனியில வேலையில் சேர்ந்திருக்கும் ராஜேஸ் இன்னும் சாதனைகளைப் படைக்க வாழ்த்துவோம்.

படிப்பதற்கும், பட்டம் பெறுவதற்கும், பணியில் சேர்வதற்கும் ராஜேஸ் யாருக்கும் சளைத்தவர் அல்ல; ஊனம் ஒரு தடையே கிடையாது.

உள்ளத்தில் ஊனம் கொண்ட மானிடர்கள்தாம் உண்மையில் உபயோகப்படாதவர்கள். அதுதான் உண்மையான ஊனம்; குணப்படுத்த வேண்டியது. உடல் ஊனம் ஒரு நோயே அல்ல. ராஜேஸின் வாழ்க்கை முறையும் சாதனைகளும் நம்மால் முடியாது என்று நினைக்கும் பெரும் நோயாளிகளுக்கு மருந்தாக அமைந்தால் நாம் அளிக்கும் சாதனையாளர் விருதுக்குரிய மரியாதை கிடைத்ததாகப் பெருமைப்படுவோம்.

## கொங்கு சாதனையாளர்



## திரு. S. குணசேகரன்

கல்விப் பணியில் இன்று சிறப்பாகச் செயல்படுவது கொங்குச் சமுதாயத்தைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. இந்தப் பணியில் சிகரத்தை எட்டியவர்கள் சிலர் உண்டு. அதில் ஒருவர்தான் திரு. S.குணசேகரன் அவர்கள். இவர் திருச்செங்கோட்டில் உள்ள பிரசித்தி பெற்ற "வித்யா விகாஷ்" என்ற கல்வி நிறுவனத்தை உருவாக்கி, உலகம் புகழ நடத்தி வருபவர்.

இவர் **1953** ஆம் வருடம் மலேசிய நாட்டில் பிறந்தவர். குடும்பச் சூழ்நிலை காரணமாக **10** வயதில் இந்திய மண்ணிற்குத் திரும்பி வந்தவர். தாய் மண்ணில் படிப்பைத் தொடர்ந்து ஈரோடு சிக்கைய நாயக்கர் கல்லூரியில் **B.Sc.,** கணிதமும், பின்னர் **M.Sc.,** கணிதமும் படித்தவர். பின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் **M.Ed.,** படித்தவர்.

இவர் நிர்வகித்து வரும் திருச்செங்கோடு "வித்யா விகாஷ்" கல்வி நிறுவனத்தில் **5000** த்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் படித்து வருகிறார்கள். இந்தியாவின் பல நகரங்களிலிருந்து மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்தும் மாணவ மாணவிகள் வந்து பயில்கிறார்கள். இந்த நிறுவனத்தின் பரந்த புகழ் யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

மேலும் சேலம் மல்லூர் அருகே "வெற்றி விகாஷ்" என்ற கல்வி நிறுவனத்தை சில ஆண்டுகளுக்கு முன் நிறுவி வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்திற்கு இணையாக நடத்தி வருகிறார்.

கல்வித் தொண்டுதான் இந்தச் சமுதாயத்தைத் தூர் வாரமுடியும், சுத்தப்படுத்த முடியும் என்று ஆணித்தரமாக நம்புபவர். தன்னுடைய இரத்த ஓட்டத்தில் கல்வி என்ற

அறிவு அணுவையும் பாய்ச்சிக் கொண்டவர்.

அனைத்துக் கல்விப் பிரிவுகளையும் ஒரே கூரையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற இலக்கை நோக்கி அயராது உழைத்துக் கொண்டிருப்பவர்.

இவர்தம் கல்விப் பணி கடல் கடந்து செல்லக்கூடிய வாய்ப்புகள், இவர் எடுத்து வரும் முயற்சிகளால் நடக்கக் கூடிய தருணம் வெகு தொலைவில் இல்லை.

புது டெல்லியிலே சிறந்த தேசியக் குடிமகன் விருது பெற்றவர். சிறந்த கல்விப் பணிக்கான விருதுகள் பல பெற்றிருக்கிறார்.

சென்னையிலே கல்விக்காக **GEM** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பள்ளிக் கணிதப் பாடத்திற்கான பாடத் திட்டங்களைத் தீட்டும் குழு உறுப்பினராக உள்ளார். +1 மற்றும் +2 வகுப்பிற்கு **Business Maths Book Reviewer** ஆகவும் பொறுப்பு வகிக்கிறார்.

நமது சமுதாயத்தில் பின் தங்கிய மாணவர்களுக்கு இலவச உதவி பல செய்து வருகிறார். இப்படி சிறந்த குடிமகன்களை உருவாக்கும் கல்வி நிறுவனத்தை நமது கொங்கு மண்டலத்திலே நிறுவி பணியாற்றி வரும் திரு. குணசேகரன் அவர்களை இந்தக் கொங்குச் சமுதாயம் மறக்கவில்லை; சாதனையாளர் விருது வழங்கி நன்றிக் கடன் ஆற்றுகிறது,

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர். V. ஆனந்த்

பொள்ளாச்சி முத்தூர் கிராமத்தில் பாரம்பரியமிக்க குடும்பத்தில் **1961** ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பாட்டனார் திரு **M.R** சின்னசாமி கவுண்டர். தந்தை **Dr. M.C.** வேலுசாமி. சிறந்த அறுவை சிகிச்சை நிபுணராக விளங்கியவர். தாயார் **Dr.** ருக்மணியம்மாள் சிறந்த மகப்பேறு மருத்துவராகப் பொள்ளாச்சியில் **M.R.C** மருத்துவ மனையமைத்து பணியாற்றியவர்.

இவரது மனைவி **Dr.** சாந்தி ஆனந்த் **M.D., DGO.** பொள்ளாச்சி நகரில் சிறந்த மகப்பேறு மருத்துவராகப் பணியாற்றுகிறார். இவர்களுக்கு **2** மகள்கள், ஒரு மகன். மூத்த மகள் செல்வி ஐஸ்வர்யா கோவை மருத்துவக் கல்லூரியில் படிக்கிறார்.

நல்லதொரு குடும்பம் மருத்துவப் பல்கலைக்கழகம். **Dr.** ஆனந்த் சென்னை மருத்துவக் கல்லூரியில் முதல் நிலை மாணவராகத் தேறினார். பின்பு மணிபால் மருத்துவக் கல்லூரியில் **M.D., DGO.** பட்டங்கள் பெற்றார். **1991**ல் பொள்ளாச்சியில் மருத்துவச் சேவையைத் துவக்குமுன், இங்கிலாந்து, ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று சிறப்புப் பயிற்சி பெற்றார். **10** வருடங்கள் கோவை மெடிக்கல் சென்ட்டரில் **ENT.**தலைமை மருத்துவராகப் பணியாற்றினார்.

இவரைக் கௌரவித்து அளிக்கப்பட்ட விருதுகளில் சில :

1. **1991** ஆம் ஆண்டு Nasal Septal Clipping என்ற கருவியைக் கண்டுபிடித்ததற்காக RAF Cooper. தேசிய விருதினைப் பெற்றார்.
2. **2002** ஆம் ஆண்டு பெங்களூரில் AOICO. கருத்தரங்கில் E MERK. தேசிய விருது வழங்கப்பட்டது.

3. 2006 ஆம் ஆண்டு குரல்வளை அறுவை சிகிச்சைக்காக RAF Copper. தேசிய விருதைப் பெற்றார். இந்தியாவிலேயே இரண்டாவது முறையாக இந்த விருதைப் பெற்றவர் இவர் மட்டும்தான்.

4. Calicut. என்டோஸ்கோபிக் சைனஸ் சர்ஜரி தொடர்பான சிறந்த கருத்துகளுக்காக Dr. ஜெயதிலகன் தங்கப் பதக்கம் பெற்றார்.

5. பொள்ளாச்சி பகுதியில் இவருடைய சேவைகளைப் பாராட்டி கௌரவிக்காத சேவா சங்கங்களே இல்லை.

படிப்பின் போது நினைவின்மையும், மறதியும், படிக்க இயலாமையுள்ள குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி கற்றுக் கொடுக்கிறார். ஆழ்குழாய்க் கிணறுகளில் தவறி விழும் குழந்தைகளை மீட்பதற்கு தனி வழிமுறைகளை உருவாக்கி, தமிழ்நாடு, கேரளா தீயணைப்புப்படை வீரர்களுக்குப் பயிற்சியளித்துப் பாராட்டுப் பெற்றவர்.

9 முறை ENSICON. என்ற பெயரில் தேசிய அளவிலாள கருத்தரங்கு நடத்தி இளைய தலை முறைக்கு வழி காட்டியாக இருக்கிறார். அறக்கட்டளை அமைத்து இலவச அறுவை சிகிச்சைகளும், காது கேளாமை உள்ள இரண்டு குழந்தைகளுக்கு ரூ. 10 லட்சம் செலவில் இலவச மருத்துவ சேவையும் செய்து வருகிறார்.

இளம் மருத்துவர்களுக்கு உதவுகிற வகையில் Micro Ear Surgery Phono Surgery, Endoscopic Sinus Surgery System போன்றவற்றை விளக்கிப் புத்தகங்கள் எழுதியுள்ளார்.

இந்திய மருத்துவ சங்கத்தில் 50 முறைகளுக்கு மேல் சிறப்புரை ஆற்றிய டாக்டர் ஆனந்த் பல வெளிநாடுகளுக்கும் சிறப்பு அழைப்பாளராகச் சென்று இருக்கிறார்.

DNB என்ற மேல் படிப்பிற்கு பொள்ளாச்சி போன்ற சிறிய ஊரில் இவருடைய MCV ENT Memorial Hospitalக்கு அங்கீகாரம் அளித்தது இந்தியாவிலேயே முதல் முறை.

கோயம்புத்தூர், நீலகிரி AOI. சங்கத்திற்கு டாக்டர் V. ஆனந்த் 7 வருடமாக செயலாளர். இப்போது தலைவராகவும் உள்ளார். இவை அனைத்தையும் தாம் பிறந்த பொள்ளாச்சியிலேயே செய்து வருகிறார் என்பது மிகப்பெரும் சிறப்பாகும்.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர். A.K. இராமசாமி

டாக்டர் A.K. இராமசாமி Ph.D. அவர்கள் தமிழ்நாட்டின் சேலம் மாவட்டம், ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் குமரன் வீரிய விதைகள், தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ் ஆகியவற்றின் நிர்வாக இயக்குநர் ஆவார். விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் ஈரோடு சி.என்.சி கல்லூரியில் 1975ம் ஆண்டு பி.காம். பட்டம் பெற்றவர். ஸ்ரீநகரில் நடைபெற்ற அகில இந்திய என். சி.சி. முகாமில் முதன்மையிடம் பெற்றவர்.

1975ம் ஆண்டு தமிழ்நாடு மாநில விவசாய சங்கத்தின் இணைச் செயலாளராகப் பொறுப்பேற்று இதுவரை விவசாயிகள் நலனில் முழு அக்கறை கொண்டு பல கோணங்களில் விவசாயிகளோடு இணைந்து செயல்பட்டு வருபவர். 1987ல் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களிடம் கோரிக்கை வைத்து தமிழக விவசாய உயர்மட்டக் குழு உதவியுடன் வறட்சியால் தமிழகம் முழுவதும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் Change Over Switch வாயிலாக போர்வெல் நீரை இறைப்பதற்கு தமிழக அரசிடம் அனுமதி பெறுவதற்கு உதவியாக இருந்தவர்.

1983 ஆம் ஆண்டு ஆத்தூர் பகுதியில் பருத்தி அதிக அளவு விளைந்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்காத சூழ்நிலையில், தமிழ்நாடு மாநில வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்து, விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவும், பருத்தி மகசூல் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி தமிழ்நாடு பருத்தி உற்பத்தியாளர்கள் சங்கத்தை அமைப்பதில் டாக்டர் A.K. இராமசாமி முக்கியப் பங்கு வகித்தார்

கடந்த ஆண்டு சீனா நாட்டுக்குப் பயணம் மேற்கொண்டு பருத்தி உயர் தொழில் நுட்ப சாகுபடி முறைகள் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டார்.

வேளான்மை தொழிலை முதன்மையாகக் கொண்டு வாழ்ந்து வரும் ஆத்தூர் பகுதி பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக மகாகவி பாரதி கண்ட கனவை நனவாக்க பாரதியார் மகளிர் கல்லூர், மகளிர் மேல்நிலைப்பள்ளி, மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கல்வியியல் கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களை தேவியாக்குறிச்சியிலும், பாரதியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி, பாரதியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், பாரதியார் நர்சரி, பிரைமரி பள்ளி போன்ற கல்வி நிறுவனங்களை ஆத்தூரிலும் நிறுவிச் செம்மையாக நிர்வகித்து வருகிறார்.

அதிக மதிப்பெண் பெறும் மாணவிகளுக்கு தங்கப்பதக்கம் மற்றும் பெற்றோர் இழந்த மாணவிகளுக்குக் கல்வி கட்டணச் சலுகையும் வழங்கி வருகிறார். கடந்த மூன்று ஆண்டுகளாக 10 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அரசு பொதுத் தேர்வை சிறப்பாக எழுத தினமலர் 'ஜெயித்துக்காட்டுவோம்' என்ற முகாமை ஆத்தூரில் நடத்தி ஆலோசனை வழங்கி வருகிறார். சேலம் பெரியார் பல்கலைக்கழத்தின் செனட் உறுப்பினராகவும் உள்ளார்.

தன் பாசமிகு பெற்றோரைப் போற்றும் வகையில் அவர்கள் பெயரில் திரு.கந்தசாமிகவுண்டர் – காளியம்மாள் அறக்கட்டளையை நிறுவி, கல்வியில் சாதனையாளர்களுக்கு உதவி செய்து வருகிறார். இவருடைய மனைவி திருமதி R. சம்பூரணம் B.A., மகள் G. சுசிகலா B.B.A., மருமகன் V. குணசேகரன் B.A., B.L., மகள் E. சசிரேகா B.Sc., (C.S), மருமகன் D. இளங்கோ DCT, மகன் R. இராம்குமார் M.E., (Structure) குடும்ப அங்கத்தினராகிய இவர்கள் அனைவரும் டாக்டர் இராமசாமி அவர்களோடு தோளோடு தோள் நின்று அவரின் லட்சியத்தில் வெற்றி பெற உறுதுணையாக உள்ளனர்.


இவர் வாங்கியிருக்கும் விருதுகளுக்குக் கணக்கே இல்லை. வாங்கியவற்றில் சில: "சிறந்த தேசிய குடிமகன்" "உழைப்பால் உயர்ந்த மாமனிதர்", "நிர்வாக ரத்னா சேவை", "செம்மல் சேவை திலகம்" "பாரத் கௌரவ விருது"

பெண்களைப் படிப்பிலும், அந்தஸ்திலும் முன்னிலையில் கொண்டு வர வேண்டும்; அப்போது தான் இந்த நாடு முன்னேறும் என்பதில் மாற்றுக் கருத்தே இல்லாதவர். அதை இலட்சியமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்.

ஆத்தூர் பகுதியில் கொங்கு இளைஞர் அணி அமைத்து அது இன்று திறம்பட செயல்படுகிறதென்றால், அதற்குச் சொந்தக்காரர் A.K.R. என்று அன்போடு அழைக்கப்படும் டாக்டர் A.K. ராமசாமி அவர்கள் தான்.

இவர் கொங்கினத்தின் எதிர்காலத் தலைவர்களுள் ஒருவர் என்று சொன்னால் அது மிகையாகாது.

## கொங்கு சாதனையாளர்



## கின்னஸ் சாதனையாளர் தேமாங்கனி ராஜ்குமார்

சிக்கனத்தின் சிக்கனம் கின்னஸ் சாதனையாளர் தேமாங்கனி ராஜ்குமார். எப்படியென்று யோசனையா ? ஒரு தபால் அட்டையில் 1330 குறள்களையும், வள்ளுவரின் வாழ்க்கைக்குறிப்பையும், 35 குறள்களுக்குத் தெளிவுரையும் எழுதி உலக சாதனை படைத்தவரை எப்படிச் சொல்வது. இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம் பிடித்தது.

ஓர் அரிசியில் இரண்டு குறள்களை எழுதி சாதனை படைத்துள்ளார்.

கடுகுகளைக் கொண்டு திருவள்ளுவரின் உருவத்தை உருவாக்கியுள்ளார்.

முட்டையை உடைக்காமலேயே ஊசியின் முனையால் சுத்தம் செய்து பல்வேறு மலர்களை ஓவியமாகத் தீட்டியுள்ளார். ஆறு குறள்களையும் வாழ்த்துக் கவிதையையும் ஒரே முட்டைக்குள் வரைந்துள்ளார். ஒரு தபால் அட்டையில் 12,000 ஓவியங்களை வரைந்து உலக சாதனை படைத்துள்ளார்.

1998 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் திருமிகு. கே.ஆர். நாராயணன் அவர்களிடமிருந்து சாதனையாளர் விருது பெற்றார்.

ஒரு தபால் தலையின் பின்புறம், ஓர் ஆண்டுக்கான நாட்காட்டியை உருவாக்கியவர்.

சாவிக் கொத்து வளையத்திற்குள் 5000 ஆண்டுகளுக்கான நாட்காட்டியை உருவாக்கி உலகச் சாதனை படைத்துள்ளார்.

சீட்டுக் கட்டில் உள்ள ஒரு சீட்டில் 200 ஆண்டுகட்கான நாட்காட்டியை உருவாக்கி சாதனை படைத்தார். மூன்று ரூபாய் செலவில் நீரைச் சூடாக்கும் கருவியினை உருவாக்கினார். 100ரூபாய் செலவில் நிலத்தடி நீரைக் கண்டு பிடிக்கும் கருவியை உருவாக்கியுள்ளார்.

ரஜினிகாந்த் உருவத்தை ஒரே அரிசியில் செதுக்கியுள்ளார். முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் தனது சாதனைகளைக் காட்டி பாராட்டைப் பெற்றுள்ளார்.

இந்திய நாட்டின் சாதனைகளைக் குறிக்கும் Limca Book of Records நூலில் இவருடைய சாதனைகள் இடம் பெற்றுள்ளன.


சாதனைச் சிகரம் தேமாங்கனி ராஜ்குமார் காடைக் கூட்டத்தில் திருமதி சரோஜா– திரு. ரங்கசாமி தம்பதியினருக்கு 2வது மகனாக 1976ல் பிறந்தார். MA பட்டம் படித்து AMIE., MTME, போன்றவற்றை முடித்து, சென்னை ஹீண்டாய் கார் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். இவருடைய சாதனைகளையெல்லாம் பார்த்து ஹீண்டாய் கார் நிறுவனம், தான் நடத்தி வரும் 'வணக்கம்' என்ற மாத இதழின் இணை ஆசிரியர் பொறுப்பை இவருக்கு அளித்து ஒரு காரும் பரிசாக அளித்துப் பெருமைப்படுத்தியுள்ளது.

திரு. ராஜ்குமார் அவர்கள் பன்முகங்களைக் கொண்டவர். இவர் கலக்கும் துறைகள் கணக்கிலடங்காது. இவர் ஓர் ஓவியர், எழுத்தாளர், கவிஞர், புதிய படைப்பாளர் என்று பல பரிமாணங்களில் மிளிர்பவர்.

'மிச்சமிருக்கும் ஏக்கங்கள்', 'முயற்சிகளின் முகவரி' என்ற இரண்டு கவிதை நூல்களை எழுதியுள்ளார். அந்தக் கவிதை நூல்களைப்படித்த குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் தன் கைப்பட பாராட்டுக் கடிதம் எழுதியுள்ளார்.

கொங்கினம் வீரத்தில் மட்டுமல்ல, கடின உழைப்பில் மட்டுமல்ல, விவேகத்திலும் சோடை போனதல்ல என்று உலகத்திற்குக் காட்டிவரும் சாதனையாளர் தேமாங்கனி ராஜ்குமாரைப் பாராட்டி, இன்னும் பல சாதனைகள் நிகழ்த்த வாழ்த்துவோம்.

# கொங்கு சாதனையாளர்



## கரூர் சபரி S. சுசீந்தரன்

முதல் தலைமுறை தொழிலதிபர். சிறிய அளவில் குறைந்த முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட சபரி இண்டர்நேஷனல் என்ற நிறுவனத்தை இன்று பன்னாட்டு நிறுவனமாக மாற்றி, வருடத்திற்கு **300** கோடி ரூபாய்க்கான வியாபாரத்தை நடத்தி வருகிறார் இவர்.

திரு. S, சுசீந்தரன் அவர்கள் **1963** ஆம் ஆண்டு திருமதி லட்சுமி – திரு. சுவாமிநாதன் தம்பதியினருக்கு மகனாகக் கரூரில் பிறந்தார். இவருடைய தந்தை கொங்கினத்திற்கே உரிய நேர்மையுடன் நீதிபதியாகப் பணியாற்றியவர். திரு. சுசீந்தரன் வெற்றிக்குப் பின் இருப்பவர் அவர் மனைவி திருமதி சுகந்தி. இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள். இந்தியாவிலே கரூர், டெல்லி, பானிபட் மற்றும் ஆல்வாய் ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளை நிறுவி வீட்டு உபயோகத் துணி வகைகளைப் பெருமளவில் ஏற்றுமதி செய்து வருகிறார்.

இது மட்டுமல்லாமல் சீனாவிலும், அமெரிக்காவிலும் நிறுவனங்களை நிறுவி திறம்பட நிர்வகித்து வருகிறார். உலகமே வியாபாரத்தில் சீனாவைக் கண்டு பயப்படும்போது, சீனா இவரைக் கண்டு பயப்படும் அளவுக்கு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகிறார்.

திரு. சுசீந்திரன் அவர்கள் ஒரு Charted Accountant மட்டுமல்லாமல் சட்டப்படிப்பும் படித்துள்ளார். தன் திறமைகளை பல்வேறு தொழிலதிபர்கள் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்காமல் தானே தொழிலில் இறங்கி, தனக்கு உபயோகப்படுத்தும் திறமை வாய்ந்தவர்.

தன் கடின உழைப்பாலும், விடா முயற்சியாலும் உலகமெங்கும் உள்ள சில்லரை வியாபாரிகளுக்குத் தேவையான வீட்டு உபயோகத் துணி வகைகளை ஏற்றுமதி செய்து வருகிறார்.

இவர் இந்தியாவில் இருக்கும் நேரம் குறைவு. இந்தச் சாதனையாளர் விருது வாங்கக் கூட இன்று அமெரிக்காவில் இருந்து கொங்கினத்தின் மேல் கொண்ட பற்றின் காரணமாக வந்திருக்கிறார்.

கரூர் ஜவுளி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் செயலாளராகப் பொறுப்பு வகிக்கிறார். கரூரின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் துரிதகதியில் செய்து வருகிறார்.

இன்று ஜவுளி ஏற்றுமதியில் உலகளவில் நாடுகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது. இந்த நிலையில் எதிர்நீச்சல் போட்டு தொழிலில் முன்னேறிவரும் திரு. சுசீந்திரன் அவர்களுக்கு Emerging India விருதை ICICI, CRISIL மற்றும் CNBC TV இணைந்து வழங்கியுள்ளது.

இன்னும் நான்காண்டுகளில் சபரி இண்டர்நேஷனல் லிமிடெட் நிறுவனத்தை ரூபாய் 1000 கோடி வியாபாரம் செய்யும் நிறுவனமாக ஆக்குவதே திரு. சுசீந்திரன் அவர்களுடைய லட்சியம்.

அதற்குமேலும் அவர் சாதனை படைத்து இந்தக் கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை தேடித் தரவேண்டும் என்று வாழ்த்துவோம்.

# கொங்கு சாதனையாளர்



## திரு அனிதா N.P. வேலு

அனிதா வேலு என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. வேலு கொங்குச் சமுதாய சேவைக்கென்றே பிறந்தவர் ஆவார். திருச்செங்கோடு வட்டாரத்தில் இவரைத் தெரியாதவர் யாரும் இல்லை. தாமாக முன் வந்து உதவி செய்யக் கூடியவர்.

1966 ஆம் ஆண்டு நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்தில் உள்ள அணிமூர் என்ற கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தந்தையார் பெயர் திரு. நல்லக் கவுண்டர். தாயார் பெயர் திருமதி பழனியம்மாள். 10ஆம் வகுப்பு வரையே படித்த திரு வேலுவின் மனைவி பெயர் திருமதி சுமதி. ஒரு மகளும், மகனும் வாரிசுகள்.

இவர் ரிக், லாரி தொழில் மட்டுமில்லாமல் நாடா இல்லாத் தறிகளையும் நிர்மானித்து நிர்வகித்து வருகிறார்.

ரிக் உரிமையார்கள் சங்கச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவராக நான்கு ஆண்டு காலமாக இருந்து வருகிறார்.

திருச்செங்கோட்டில் கொங்கு இளைஞர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக உள்ள திரு. வேலு சங்கச் செயல்பாடுகளில் முழு ஈடுபாடு கொண்டு இளைஞர் சங்க வளர்ச்சியிலும், சமுதாய முன்னேற்றக் காரியங்களிலும் பெரும் பங்காற்றி வருகிறார்.

தனிப்பட்ட முறையில் நமது சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்குத் தேவையான கல்வி உதவிகளைச் செய்து வருவது குறிப்பிட வேண்டிய செயல்பாடு ஆகும்.

அனிதா வேலுவைப் போன்றவர்கள் நம் கொங்கினத்தின் எதிர்காலச் சிற்பிகள் என்று சொன்னால் மிகையாகாது. இவரை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும் சங்கமும், சமுதாயமும் பெருமைப்படுகிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்கள்

## திரு. ரத்தினசாமி

ஈரோடு மாவட்டம் சென்னிமலை வட்டம், பசுவப்பட்டி கிராமம், பூச்சக்காட்டுவலசைச் சேர்ந்த சின்னச்சாமி கவுண்டர் மகன் திரு. ரத்தினசாமி அவர்கள் சொட்டுநீர் பாசனம் முலம் கரும்பு உற்பத்தியில் சிறந்து விளங்கி அதிக மகசூல் எடுத்தமைக்காகப் பாராட்டி 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

## திரு. விஜயன்

ஈரோடு மாவட்டம், சக்தி தாலுகா, பவானி சாகர், இரன்காட்டுரைச் சேர்ந்த திரு. பொன்னுசாமிக் கவுண்டர் மகன் திரு. விஜயன் அவர்கள் இரவை பாசன நெல் உற்பத்தியில் சிறந்து விளங்கி அதிக மகசூல் எடுத்தமைக்காகப் பாராட்டி கொங்கு வேளாண் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

## திரு. கருப்பசாமி கவுண்டர்

ஈரோடு மாவட்டம், பெருந்துறைவட்டம், ஊத்துக்குழியைச் சேர்ந்த திரு சின்னையா கவுண்டர் மகன் திரு. கருப்பசாமி கவுண்டர் அவர்கள் மானாவரி நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் எடுத்தமைக்காகப் பாராட்டி 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

## டாக்டர் சி.எஸ். விஷ்ணு பிரசாத்

சித்தோடு கொங்கு முன்னணி உறுப்பினர் திரு. எஸ்.ஆர். சச்சிதானந்தம்–திருமதி மணிமேகலை தம்பதியினரின் மகன் டாக்டர் சி.எஸ். விஷ்ணு பிரசாத், எம்.பி.பி.எஸ்., அவர்கள் அகில இந்திய மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் நல்ல ரேங்க் பெற்று, ஹரியானா மாநிலம் ரோட்டக் நகரில் உள்ள PT.B.D Sharma Medical கல்லூரியில் M.S.(Ortho) பயில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடுமையான போட்டிகளின் இடையே மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனமான அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழகம் நடத்திய தங்கள் கல்லூரிக்கான மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் **5–**வது ரேங்க் பெற்று, M.Ch., (Neuro Surgery) பயில தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு நடத்திய மருத்துவ பட்ட மேற்படிப்பிற்கான நுழைவுத் தேர்வில் தமிழ்நாடு அரசு மருத்துவ சேவைக்கான Tamilnadu Public Service Commission எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வில் தேர்ச்சி பெற்று Asst Surgeon கான பதவிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

Union Public Service Commission தேர்வில் Combined Medical Services Examination Personality தேர்வில் Personality Test க்கு தகுதி பெற்றுள்ளார்.

செல்வன் டாக்டர் விஷ்ணு பிராசாத் இன்னும் பல சாதனைகள் படைக்க வேண்டும் என்று சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்

## செல்வி அசிந்தய ரூபா

கோவை மாவட்டம், அவினாசி வட்டம் கனுவக்கரையை சார்ந்த டாக்டர் அருள் – டாக்டர் திருமதி ஆனந்தி அருள் தம்பதியினருக்கு **09.04.1993** அன்று மகளாகப் பிறந்தவர் செல்வி அசிந்தய ரூபா.

செல்வி அசிந்தய ரூபா Roller Skating என்ற விளையாட்டுத்துறை பிரிவில் தனது எட்டாவது வயதில் **2003–**ம் ஆண்டு பயிற்சியைத் துவக்கினார். இதில் ஆர்வத்துடன் செயல்பட்டதால் பயிற்சியை ஆரம்பித்த மூன்று மாதத்திலேயே கோவை மாவட்ட அளவிலான போட்டியில் முதல் பரிசு பெற்றார். அதன் பிறகு ஏழு தங்கப் பதக்கங்களையும், இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும், பல நற்சான்றுகளையும் மாவட்ட அளவிலும் (Distric Level), மாநில (State Level) அளவிலும் பெற்றுள்ளார்.

சென்ற **2004–**ம் ஆண்டு மே மாதத்தில் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டிணத்தில் தேசீய அளவில் நடந்த **41–**வது National Roller Skating போட்டிகளில் தமிழ்நாடு மாநிலம் சார்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்று, Road Race பிரிவில் வெண்கலக் பதக்கம் பெற்று தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இந்த விளையாட்டுத் துறை பிரிவில் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட்டு விளையாடி வருகிறார். எதிர்காலத்தில் இன்னும் பல சாதனைகளைச் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை, உறுதி மற்றும் உற்சாகத்துடன் இருந்து வருகிறார்.

செல்வி அசிந்தயா ரூபா மேலும் பல வெற்றிகள் பெற்று உலக அளவில் புகழ்பெற சங்கம் வாழ்த்துசிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்

## செல்வன் A. அரவிந்தன்

நாமக்கல் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரும், அடிப்படை உறுப்பினருமான இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரியும் திரு பி. அம்மையப்பன்-நாமக்கல் கொங்கு மகளிர் சங்கத்தின் செயலாளர் திருமதி புனிதமலர் அம்மையப்பன் ஆகியோரின் இளைய புதல்வர் செல்வன் எ. அரவிந்தன். கடந்த ஆகஸ்டு 20ல் கர்நாடக மாநிலம் பெங்களூரில் அபாக்கஸ் பாடத் திட்டத்தில் நடைபெற்ற அகில இந்தியப் போட்டியில் கலந்து கொண்டார். அத்தேர்வில் 6 KYU பிரிவில் இந்திய அளவில் முதலிடம் பெற்று Champion of Champion பட்டம் பெற்றுள்ளார்

இந்திய அளவில் முதலிடம் பெற்று தேர்ச்சி பெற்ற இவர் டிசம்பர் மாத இறுதியில் சிங்கப்பூரில் நடைபெற உள்ள உலக அளவிலான போட்டியில் தகுதிச் சுற்று இல்லாமல் நேரடியாகக் கலந்து கொள்ளத் தேர்ச்சி பெற்றுள்ளார்.

நாமக்கல் ஸ்பெக்ட்ரம் அகாடமி பள்ளியில் 6ம் வகுப்பு பயில்பவரும், இத்தகைய இளைய வயதில் பட்டம் பெற்றவரும், மேலும் நாமக்கல் மாவட்டத்திற்கு முதன் முறையாக இப்பெருமையைப் பெற்றுத் தந்தவருமான செல்வன் அரவிந்தனை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றது. மேலும் உலக அளவிலான பட்டம் பெறுவதற்கும் சங்கம் வாழ்த்துகிறது.

## செல்வி V. லீலாவதி

நாமக்கல் மாவட்டம் வேட்டாம்பாடி கிராமத்தில் விவசாயக் குடும்பத்தில் **16.11.1984** திரு. வீரப்பன் அவர்களின் புதல்வியாகப் பிறந்தவர் செல்வி லீலாவதி.

நாமக்கல் செல்வம் கலைக் கல்லூரி ஆதரவில் அகில இந்திய அளவில் இதுவரை **17**க்கும் மேற்பட்ட (Heptathalon) பல்தடகளை போட்டிகளில் பங்கு பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இப்போட்டி ஏழு விதமான விளையாட்டுகளை உள்ளடக்கியது. ஓட்டம் **– 3** பகுதி, தடகளை **– 2** பகுதி, பந்து வீச்சு **– 2** பகுதி என அனைத்தையும் முடித்து முதன்மையாக வர வேண்டும்.

தனி ஆற்றலும், தொடர்ந்த பயிற்சியும், கடின உழைப்புமே இவர் வெற்றிக்குக் காரணம். செல்வி லீலாவதி உலக அளவில் சாதனை படைக்க வேண்டும் என சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகிறது.

## 2006 ஆம் ஆண்டு 10ம் மற்றும் 12ம் வகுப்பு அரசுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### 10ம் வகுப்பு

செல்வி R. **தாரணி** (த/பெ. M. இராமலிங்கம் கடச்சநல்லூர்) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 500 / 491 மதிப்பெண்கள் பெற்று தமிழ் நாட்டிலேயே முதலிடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வி G. **பவிந்திரா** (த/பெ. D. கணேசன், சங்ககிரி) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 500 / 488 மதிப்பெண்கள் பெற்று, இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வன் K.S. **நிர்மல்குமார்** (த/பெ. K.M. செங்கோட்டையன் அந்தியூர்) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 500 / 488 மதிப்பெண்கள் பெற்று, இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வி R. **சங்கீதா** (த/பெ. K.R. ராஜேஷ்வரன்) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 10 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 500 / 481 மதிப்பெண்கள் பெற்று, மூன்றாம் இடம் பெற்றதைப் பாரட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

### 12ம் வகுப்பு

செல்வன் M. **சித்தார்த்** (த/பெ. P. மாரிமுத்து, கோவை,) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 வகுப்பு அரசுப் பொதுத் தெர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 1200/1172 மதிப்பெண்கள் பெற்று முதல் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக கொள்கிறது.

செல்வி T. **கௌதமி** (த/பெ. M. தியாகராஜன், நாமக்கல்) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 1200/ 1164 மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.

செல்வி N. **சத்தியா** (த/பெ. P. நடராஜன் ஈரோடு,) 2006 ஆம் ஆண்டில் நடைபெற்ற 12 வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்து கொண்ட கொங்கு இன மாணவர்களில் 1200 / 1163 மதிப்பெண்கள் பெற்று, முன்றாம் இடம் பெற்றதைப் பாராட்டி சங்கம் தன் வாழ்த்துகளை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது.